
மகப்பேறு மருத்துவம்



தாமரை நூலகம், சென்னை - 26.

உ

சிவமயம்

ஸ்ரீ நீலாயதாட்சி சகாயம்

மகப்பேறு மருத்துவம்

பதிப்பாசிரியர்
எஸ்.பி. இராமச்சந்திரன்

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண் - 044 - 23620249

தாமரை வெளியீடு எண் : 204
முதல் பதிப்பு : டிசம்பர் - 1997
இரண்டாம் பதிப்பு : அக்டோபர் - 2015
உரிமைபெற்றது

நூலைப்பற்றி

நூலின் பெயர் : மகப்பேறு மருத்துவம் ஸ்திரீஜென்ம சார்த்தகம் என்னும் மருத்துவ சாஸ்திரம்

நூலின் தன்மை : சித்த மருத்துவம்

பதிப்பாசிரியர் : எஸ்.பி. இராமச்சந்திரன்

வெளியிட்டோர் : தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி
வடபழனி, சென்னை - 26.

பதிப்பு ஆண்டு : அக்டோபர் - 2015

உரிமை : பதிப்பகத்திற்கு

நூல் வடிவம் : 21 செ. மீ. x 14 செ. மீ

தாளின் தன்மை : 16.6 கி.கி. வெள்ளைத்தாள்

எழுத்தின் அளவு : 11 புள்ளி

மொத்த பக்கங்கள் : 64+XII

பிரதிகள் : 1000

நூலின் விலை : ரு. 30.00

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட்
நுங்கம்பாக்கம், சென்னை - 34

பதிப்புரை

கடவுள் ஆணாகவும் பெண்ணாகவும் படைத்ததெல்லாம் உலகம் வாழ வேண்டும் என்பதற்காகத்தான். புல், பூண்டு முதல் உயிரினம் அத்தனைக்கும் இது பொது விதி. ஆணும் பெண்ணும் இல்லாமல் செடி கொடிகளும் இல்லை. பறவைகள் விலங்குகளும் இல்லை.

மனிதனும் இல்லை!

பால் உறவு என்பது மனித இனம் ஒன்றில் தவிர மற்ற எல்லா இனங்களிலும் இனப்பெருக்கத்திற்காக மட்டுமே நடைபெறுகிறது.

மனிதன் மட்டும் தன் வக்கிர புத்தியாலும் விகாரமான உணர்வுகளாலும் தூண்டப்பட்டு அதை ஒரு அன்றாட அலுவலாக மாற்றிவிட்டான். அதோடு நின்றிருந்தாலும் பரவாயில்லை முறையற்ற காரியங்களிலும் வரம்பு மீறிய செயல்களிலும் ஈடுபட்டு சமுதாய விரோதியாகவும், தர்ம நியாயங்களை மீறுபவனாகவும் நடந்து கொள்கிறான்.

பலாத்காரம், கற்பழிப்பு போன்றவை மிருகங்கள் பறவைகளிடையிலும் இல்லை. பூச்சி, புழுக்களிடம் கூடக் கிடையாது. இச்செயல்களால் மனிதன் விலங்குகளை விடக் கேவலமான நிலைக்குத் தாழ்ந்து போயிருக்கிறான். இவற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் மனித சிந்தனை பண்படுத்தப்படுவதற்கான முயற்சிகள் தொன்று தொட்டு நடைபெற்று வந்துள்ளன. ஆயினும் அவை வெற்றி பெற்றுள்ளன என்று சொல்வதற்கு இயலவில்லை.

அதே சமயம் இன்றைய இலக்கியங்கள், பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், சினிமா முதலிய பொழுது போக்குச் சாதனங்கள் மனிதனுக்கு மனக்கட்டுப்பாட்டையும், ஒழுக்க நியதிகளுக்கு உட்பட்ட பண்புகளையும் வளர்ப்பதற்கு உதவுவனவாக இல்லை என்பதையும் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

இனவிருத்தி, மகப்பேறு என்ற புனிதமான - கொண்டாடப் பட வேண்டிய காரியம் மனித இனத்தில் மட்டும் கொச்சைப்படுத்தப்பட்டு இழிவான செயலாகக் கருதப்படும் அளவுக்குத் தாழ்ந்து போயிருக்கிறது என்பது உண்மை. ஒரு புறம் அவ்வாறிருந்த போதிலும் மறுபுறம் திருமணம், சடங்குகள், கொண்டாட்டம், நடந்து கொண்டும் இருக்கின்றன. இதிலிருந்து சமுதாயத்தின் அவசியமும் - அதே சமயம் மனித இனத்தின் ஒரு பகுதியின் அவலட்சணமான அசிங்கியமான விகாரங்களும் - ஆக இரண்டும் ஒரே சமயத்தில் இணைந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதை இங்கே குறிப்பிட்டே ஆகவேண்டும்.

குடும்பத்தில் ஒரு புதிய உயிர் தோன்றப் போகிறது என்பது எல்லாக் குடும்பங்களிலும் உவகையூட்டக் கூடிய ஒரு நிகழ்ச்சி. மனிதன் தன் பித்ருக்களுக்குச் செய்ய வேண்டிய கடமை புத்திரோற்பத்தி. அக்கடமையைச் செய்யத் தவறுபவன் நரகத்திற்குப் போவான் என்று வேதங்கள் கூறுகின்றன.

இதில் ஆண் பெண் இருசாரருக்குப் பங்கு உண்டு. என்றைக்குமே ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி, ஆணுக்கு ஒரு நியாயம், பெண்ணுக்கு ஒரு நியாயம் என்ற ஒழுங்குமுறை சமுதாயத்தில் இருந்ததில்லை. நம்முடைய காலத்தில் இருப்பதைவிட அதிகமான சுயேச்சையும், உரிமைகளும் உடையவர்களாக வேதகால-சங்ககாலப் பெண்கள் இருந்திருக்கிறார்கள் என்பதைப் பழங்கால இலக்கியங்கள் வரலாறுகள் மூலம் அறிய முடியும்.

எனவே ஆண் - பெண் - கணவன் மனைவி இருவரும் விரும்பி, கருத்தொருமித்து தங்கள் சந்ததி வளரச் செய்யும் காரியத்தில் ஈடுபடும் பொழுதே அழகான நல்ல குழந்தைகள் பிறக்கிறார்கள் என்பது முற்றிலும் உண்மை.

மகாபாரதத்தில் உடலுறவுக்குக் கட்டாயப்படுத்தப்பட்ட ஒருத்தி கண்களை மூடிக் கொண்டதால் குருடாக ஒரு பிள்ளையும், இன்னொருத்தி பயத்தில் உடல் வெளுத்ததால் பாண்டு ரோகியான ஒரு பிள்ளையும் பிறந்தனர் என்பதைப் படிக்கிறோம். சமுதாயத்திற்கு அவசியமான கருத்துக்கள் இங்கே கூறப்பட்டிருக்கின்றன என்பதை உணர வேண்டும்.

ஒரு பெண் தாய்மை அடையத் தயாராகும் காலத்திலிருந்தே அவளுடைய குழந்தையின் எதிர்காலம் உருவாகத் தொடங்கி விடுகிறது. கருவுற்ற பின் அவளைக் கணவனும் மற்றவர்களும் நன்கு கவனித்துக் கொள்கிறார்கள். அவளுடைய அன்றாடப் பழக்க வழக்கங்கள், உண்ணும் உணவு, படிக்கும் நூல்கள், மனதில் உலவவிடவேண்டிய எண்ணங்கள் எல்லாவற்றுக்குமே முறைகள் கூறப்பட்டுள்ளன.

இயல்பான வாழ்க்கையை மேற் கொண்டுள்ள பெண்ணுக்கும் பிரசவம் - மகப்பேறு இயல்பாகவே நடை பெறுகிறது. ஆனால் பிரசவ காலத் துன்பங்கள், கஷ்டங்களுக்கு ஆளாகிற பெண்களும் உண்டு. இதனாலேயே பொதுவாக பிரசவம் என்பது பெண்ணுக்கு ஒரு கண்டம் மாதிரி. தாயும் குழந்தையும் நலமாக இருக்கும் படி அமைவது இறைவன் அருளாலேயே என்ற கருத்துப் பொதுவாக நிலவுகிறது.

நூற்றுக்குத் தொண்ணூறுக்கு மேல் சுகப்பிரசவமாகவே இருந்த போதிலும், பிரசவத்தைப் பற்றிய பயம், குழப்பங்கள் எல்லாமே அறியாமை காரணமாகவே ஏற்படுகின்றன. அந்த அறியாமையைப் போக்குவதற்கு இந்த நூல் ஒரு ஒளிக் கதிராக உதவும்.

இந்த நூலின் ஆசிரியர் டி-ஆர். மகாதேவ பண்டிதர் வைத்தியத் துறையில் சிறந்த நிபுணர், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றலில் மிகவும் கெட்டிக்காரர். தேர்வு எழுதும் மாணவர்களுக்கு முக்கியமான குறிப்புகளை மட்டும் எடுத்துச் கொடுப்பது போல், ஒவ்வொரு குறிப்பாக இவர் எடுத்துக் கொடுக்கும் முறை மனதில் பதியச் செய்து விடுகிறது.

தவிர தொடர்புடைய விஷயங்களை அட்டவணைப்படுத்திக் கொடுத்திருக்கும் முறை இவருக்கே உரியது. இவ்வளவு தெளிவாகவும் மனதில் பதியும்படியாகவும் எழுதப்பட்டுள்ள நூல் வேறொன்று இருக்க முடியாது என்றே கூறிவிடலாம்.

இந்நூலாசிரிய எழுதிய நூல்கள் பிராண ரக்ஷாமிர்த, சிந்து, ரோக நிர்ணய சாரம் என்பவற்றை ஏற்கெனவே வெளியிட்டுள்ளோம்.

ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தெரிந்து வைத்திருக்க வேண்டிய முக்கியமான விஷயங்களைக் கூறும் இந்த நூல் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய ஒன்றாகும்

இப்படிக்கு,
எஸ்.பி. ராமச்சந்திரன்,
பதிப்பாசிரியர்.

பொருளடக்கம்
(CONTENTS)

மருத்துவ சாஸ்திரம்

⇔ 4-வது மலக்கட்டு நாபிக்கொடியிலுண்டாகி சிசுப்பிரசவமாக தடைப்பட்டால் அதற்கு சிகிச்சை.

⇔ 5-வது பனிக்குடத்தில் அதிக நீர் சேர்ந்திருந்தால் அதற்கு சிகிச்சை

⇔ 6-வது பிருஷ்டம் அதாவது இடுப்பின் பூட்டு எலும்பு வளைவுள்ள ஸ்திரீ பிரசவிக்க சிகிச்சை.

⇔ 7-வது சிசுவின் சிரசில் நீர்க்கொண்டு சிரசு பெரிதாயிருந்தாலும் சரி, சிசு சுபாவத்திற்கு அதிக பெரிதாயிருந்தாலும் சரி, சிசுவுக்கு கருப்பையில் வியாதிகண்டு வயிறு பெரிதாய் வீங்கியிருந்தாலும் சரி, அச்சிசு அல்லது சிசுவின் சிரசு யோனி முகத்தில் கொள்ளாமல் இருந்தால் அதற்கு சிகிச்சை.

⇔ 8-வது ஸ்திரீயின் கர்ப்பாசயம் அகலமில்லாமல் இருந்தால் அதற்கு சிகிச்சை.

⇔ 9-வது கருப்பைச் சாய்ந்திருந்தால் அதற்கு சிகிச்சை.

⇔ 10-வது பிரசவவேதனை அற்பமாய் வந்தால் அதற்கு சிகிச்சை.

⇔ 11-வது பிரசவ வேதனை பலமாய் வந்தும் கிரமமற்ற தாயும் உபயோக மற்றதாயுமிருந்தால் அதற்கு சிகிச்சை.

⇔ 12-வது யோனி முகத்தில் முதலில் முகவாய்க் கட்டை வந்திருந்தால் அதற்கு சிகிச்சை.

8-வது அத்தியாயம்

<u>அதிகஷ்டப்பிரசவத்தின் 4 வகுப்புகள்</u> (42 - 45)

➲ 1-வது சிசுவின் முழங்கால் அல்லது பாதங்கள் உதயமானால் அதற்கு சிகிச்சை.

➲ 2-வது கருப்பையின் முகத்தில் சிசுவின் கை உதயமானால் அதற்கு சிகிச்சை.

➲ 3-வது நாபிக்கொடி இறங்கலுக்கு சிகிச்சை.

உ

சிவமயம்

ஸ்ரீ நீலாயதாட்சி சகாயம்.

மகப்பேறு மருத்துவம்

ஸ்திரீஜென்ம சார்த்தகம்

என்னும்

மருத்துவ சாஸ்திரம்

இஃது
தஞ்சாவூர்

டி. எ. இராமபண்டிதர் புத்திரராகிய
ஆயுள்வேத பாஸ்கர

டி.ஆர். மகாதேவபண்டிதர்

அவர்களால்,

அநேக சமஸ்கிருதம், தமிழ், இங்கிலீஷ், வைத்திய
கிரந்தங்களைப் பார்வையிட்டு ஸ்திரீகளின் பிரசவம்
சுகமாய் முடியும்படியான அநேக உபாயங்களையும்
இன்னும் பற்பல விஷயங்களையும் சொல்லிய
இந்நூல் இயற்றப்பட்டது.

தஞ்சை :
"பூரணச்சந்திரோதய அச்சுக்கூடத்தில்"

பதிப்பிக்கப்பட்டது.
1901.

முதல் பதிப்பின் முகவுரை.

PREFACE.

இத்தேசத்தில் இதுவரையிலும் சாதாரணமான தமிழ் நடையில் மருத்துவசாஸ்திரம் இயற்றப்படாததினால் மருத்துவச்சிகளும், வைத்தியர்களும் பிரசவங்களின் பேதங்களையும், லக்ஷணங்களையும் அறிந்து கொள்வதற்குக் கூடாதவர்களாயும், சமய உசிதமாக சிகிச்சைகளைச் செய்ய போதுமான அனுபோக மில்லாதவர்களாயும் இருக்கிற படியால் அவர்கள் இம்மருத்துவ சாஸ்திரத்தில் சொல்லிய படி சிகிச்சைகளைச் செய்து தகுந்த அனுபோகத்தை அடையும் பொருட்டும், ஒவ்வொரு கிரகத்திலுள்ள ஸ்திரீ புருஷர்கள் இந்த மருத்துவசாஸ்திரத்தைப் படித்து அதில் சொல்லிய சகல விஷயங்களையும் அவகாசப்படுத்திக் கொண்டு ஸ்திரீயின் பிரசவகாலத்தில் பிரசவம் கிரமமாய் நடக்கும்படி தகுந்த முயற்சி எடுத்துக்கொள்ளும் பொருட்டும், இந்த காரியத்தில் பிரவேசித்தோம்.

சகல மருத்துவச்சிகளும், வைத்தியர்களும் இந்த மருத்துவ சாஸ்திரத்தைப்படித்து அதில் சொல்லிய சர்வ விஷயங்களையும் ஞாபகத்தில் பூர்த்தியாய் வைத்துக் கொண்டு, சமய உசிதமாய் சிகிச்சைகளைச் செய்வார்களாகில் ஸ்திரீ சுகமாய் பிரசவித்து தாயும் குழந்தையும் உயிரோடு வாழ்வதுமன்றி, உலகமுழுமையும் சிகிச்சைகளைப் பற்றி அதிகீர்த்தி உண்டாகி அவர்கள் (மருத்துவச்சிகளும் வைத்தியர்களும்) இம்மை மறுமைக்குரிய பயன்களை இனிதே அடைந்து வாழ்வார்கள்.


டி.ஆர். மகாதேவபண்டிதர்,
கிரந்த கர்த்தா.

ஸ்திரீஜென்ம சார்த்தகம்

என்னும்

மருத்துவ சாஸ்திரம்.

இம்மருத்துவ சாஸ்திரத்தைப்படிக்க ஆரம்பிக்குமுன் பூர்ணகர்ப்பஸ்திரீயின் பிரசவகாலத்தில் கருப்பாசயத்தில் சிசு இருக்கிற நிலைமையை கர்ப்பஸ்திரீகளுக்கும் அவர்களுடைய புருஷர்களுக்கும் செம்மையாய்த் தெரியும்படி ஓர் படம் ஏற்படுத்தியிருப்பதை இதனடியில் காண்க.



உ
சிவமயம்

ஸ்ரீ நீலாயதாட்சி சகாயம்.

மகப்பேறு மருத்துவம்
ஸ்திரீஜென்ம சார்த்தகம்
என்னும்
மருத்துவ சாஸ்திரம்
MIDWIFERY.

1-வது அத்தியாயம்.

ஸ்ரீ அகண்ட சச்சிதானந்த நித்திய பரிபூர்ண ஸ்வயம்பிரகாச தத்பத ஸ்வரூபராயும் பஞ்சகோச வியதிருத்த துரியஸ்வரூபராயும், மகானுபாவராயும், பிபீலிகாதி பிரம்ம பரியந்தம் சம்ரக்ஷகராயும் விளங்காநின்ற பரமசிவனானவர் ஆயுள்வேதத்தை பார்வதி தேவியாருக்கு; அநுக்கிரகஞ்செய்ய; அந்த பார்வதி தேவியார் நந்தி தேவருக்கு அருளிச் செய்ய அவர், தேவர், முனிவர், சித்து புருஷர் இவர்களுக்கு உபதேசித்தருளினார்.

ஸ்திரீகள் இம்மருத்துவ சாஸ்திரத்தைப் படிப்பதினாலடையும் பயன்கள்.

இந்த தேசத்தில் வாசம்பண்ணுகின்ற நாசூக தேகமுள்ள கர்ப்ப ஸ்திரீகள் கருத்தரித்தது முதல் பிரசவமாகும் வரையில் எப்படி பிரசவிக்க போகிறோமென்று திகில் அடைந்துக் கொண்டிருக்கிற விஷயம் சர்வத்திராளுக்கும் தெரிந்த விஷயமே. ஆனால் அப்படி திகில் அடைய வேண்டியதில்லை. ஏனெனில் ஸ்திரீகளுக்கு கருத்தரித்தல், பிரசவித்தல் இவ்விரண்டும் இயற்கையான கருமங்களில் சேர்ந்தனவேயன்றி வேறு

அன்று. இப்பொழுது இந்த தேசத்தில் ஸ்திரீகளில் அநேகர் கல்விப் பயிற்சியுள்ளவர்களாயிருக்கிற படியால் இம்மருத்துவ சாஸ்திரம் சமூலமும் படித்து ஆராய்ந்துக் கொள்ளும்படியாக ஒவ்வொரு விஷயமும் தெளிவாய்ச் சொல்லி இருக்கிறோம். இக்கிரந்தத்திலுள்ள விஷயங்களை எல்லாம் தெரிந்து கொள்வதினால் அடையும் பயன்கள் அநந்தம்.

நல்ல காற்றும் நல்ல ஜலமுமுள்ள சுத்தமான இடத்தில் பால்லிய முதல் வாசம் செய்து கொண்டிருக்கிற அதிசுகுமாரமான ஸ்திரீகள் தேக உழைப்பு கூடியமட்டும் எடுத்துக்கொள்வதால் அவர்களின் அங்கக்கட்டுகள் பலத்தை அடையும். இந்த ஸ்திரீகள் எவ்வன பருவத்தில் கடினமான வேலைகள் செய்தபோதிலும் தேகத்தில் கஷ்டமாகவே தோன்றாது. அன்றியும் இந்த ஸ்திரீகளுக்கு பிரசவகாலத்திலுண்டாகும் பிரசவ வேதனையை ஒரு வேதனையில் சேர்ந்ததாக இராது. அப்படி ஸ்திரீகள் தேக உழைப்பு எடுத்துக்கொள்ளாமலிருந்தால் அந்த ஸ்திரீகளின் அங்கக்கட்டுகள் பலஹீனத்தை அடைந்துத் தளர்ந்திருப்பதுமன்றி அற்ப முகாந்திரத்தால் அவர்கள் வியாதியஸ்தர்களாகிறார்கள். இத்தன்மையான ஸ்திரீகளுக்கு இயற்கையான பிரசவத்திலேயே வயித்திய சகாயமும், மருந்தும் அவசியமாய் வேண்டியது. கர்ப்ப ஸ்திரீகளுக்கு ஏதேனும் வியாதிகள் சம்பவித்தால் அறிவில்லாத அம்பட்ட மருத்துவச்சியினிடத்திலிருந்தாவது அல்லது வைத்திய சாஸ்திரத்தில் நிபுணருமில்லாதவராயும் அனுபோக மில்லாதவராயு மிருக்கிற வைத்தியரிடத்திலிருந்தாவது மருந்துகளை வாங்கிக்கொடுக்கக்கூடாது.

மருத்துவச்சி அல்லது மருத்துவ வைத்தியர் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

ஸ்திரீயானவள் பிரசவ வேதனையிலிருக்கையில் மருத்துவச் சியையாவது அல்லது மருத்துவ வைத்தியரையாவது அழைத்தால் அவர்கள் யாதொரு தாமதமன்றி உடனே அடியில்கண்ட மருந்துகளுடனும் ஆயுதங்களுடனும் புறப்படவேண்டியது.

மருந்துகள் - MEDICINES.

1. கிளொரல் ஹைட்ராஸ் (Chloral Hydras).
2. ஏர்கட் எக்ஸ்ட்ராக்ட்டு (Ergot Extract).

3. அபினித்திராவகம் - (Tincture opium).
4. பரிமள நவக்ஷாரத்திராவகம் - (Aromatic Liquor Ammonia).
5. குளோரபாம் - (Chloroform).
6. குளோரொடைன் - (Chlorodyne).
7. கார்பாலிக் லோஷன் - (Carbolic lotion).
8. பிராந்தி - (Brandy).
9. கர்ப்பூரத்தைலம் - (Turpentine).
10. படிகாரம் - (Alum).
11. அயத்திராவகம் - (Tincture Ferri).
12. குவைனா - (Sulp-Quina).
13. பெல்லடோனா பூசுத்தைலம் - (Belladona Liniment).
14. பெல்லடோனா எக்ஸ்ட்ராக்ட்டு - (Belladona Extract).

ஆயுதங்கள் - INSTRUMENTS.

1. கத்தரி - (Scissors).
2. ஸ்டெதாஸ்கோப் - (Stethoscope)
3. கிளினிக்கல் தர்மாமிட்டர் - (Clinical Thermometre)
4. குறடு - (Forcep).
5. ரப்பர் பீச்சாங்குழல் - (Rubber Syringe)
6. ரப்பர் சலாக்கு.
7. ஸ்பாஞ்சு - (Sponge)
8. ஊசி - (Needle)
9. பார்ன்ஸ் ரப்பர்துருத்தி - (Barne's bag)

மேற்சொல்லிய 14 மருந்துகளுடனும், 9 ஆயுதங்களுடனும் மருத்துவச்சி அல்லது மருத்துவ வைத்தியர் பிரசவிக்கும் ஸ்திரீயினிடத்தில் போய் மேற்படி மருந்துகளும் ஆயுதங்களும் அடங்கிய பெட்டிகள் ஒரு பக்கத்தில் வைத்து பிறகு பிரசவ ஸ்திரீயின் சமீபத்தில் போய் முதலில் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களாவன :-

1. பிரசவ ஸ்திரீயின் தற்கால ஸ்திதி.
2. பிரசவ ஸ்திரீ பிரசவ வேதனையிலிருப்பதும் இல்லாததும்.
3. பிரசவ வேதனையிலிருந்தால் எந்த உறுப்பு உதயமாகுமென்பது.

4. கருப்பையில் சிசுவின் நிலைமை.
5. பிரசவத்தின் கிரமம்.
6. பிரசவ முடிவின் உத்தேசம்.

இவ்வாறு விஷயங்களையும் தெரிந்துகொண்ட பிறகு இயற்கையான பிரசவ நோயா அல்லது இதர சம்பந்தமான நோயாவென்று அடியில் சொல்லிய லக்ஷணங்களால் தெரிந்துக்கொள்ள வேண்டியது.

இயற்கையான பிரசவ நோயின் லக்ஷணங்கள்.	இதர சம்பந்தமான நோயின் லக்ஷணங்கள்.
நோய் மேல்வயிற்றில் ஆரம்பித்து அடிவயிற்றில் இறங்கும், மத்தியகாலம் கிரமமாயிருந்து வரவர விருத்தி அடையும். முதுகிலும் இடுப்பிலும் நோய் அதிகமாயிருக்கும்.	நோய் முன்பாகத்திலுண்டாகி வர வர விருத்தியடையாமல் கொஞ்ச நேரம் அதிகமாயிருந்து நின்றுவிடும்

பிரசவஸ்திரீயின் சரீர ஸ்திதியை நாடி, நாக்கு, மலம் இவைகளினாலும், மற்றவைகளை அங்குல பரிக்ஷையினாலும் தெரிந்து கொள்ள வேண்டியது.

பிரசவத்தில் மருத்துவச்சியின் சகாயமே முக்கியமானதாகையால் பிரசவ ஸ்திரீயை விட்டு மருத்துவச்சி விலகக்கூடாது. மருத்துவச்சியின் முக்கிய வேலையானது பிரசவ ஸ்திரீக்கு யாதொரு அபாயமுமுண்டாகாமல் சாக்கிரதையாய் பார்த்துக் கொள்ள வேண்டியதேயன்றி பிரசவம் சிரமமாய் நிறைவேறுகையில் தான் மத்தியில் பிரவேசித்து சுபாவமாய் நடக்கும் பிரசவத்தைக் கெடுக்கக்கூடாது.

இதர சம்பந்தமான பிரசவநோயாயிருந்தால் பேதியாகும்படி ஆமணக்கெண்ணெயைக் கொடுக்க பேதியாகி நோய் நின்று விடும். அப்படி நிற்காவிட்டால் ஒரு கீறென் இடையுள்ள அபினியை ஒரு மாத்திரையாக்கிக் கொடுக்க நோய் நின்றுபோம்.

கிரம பிரசவ நோயாயிருந்தால் அதை அங்குல பரிக்ஷையினால் தெரியவரும். பிரசவவேதனை என்று தெரியவந்தவுடனே சிசு

கருப்பையில் சரியானயிடத்திலிருக்கிறதா, இல்லையாவென்றும் சிசுவின் எந்த பாகம் உதயமாகிறதென்பதையும் தெரிந்துக்கொள்ள *பனிக்குடத்திற்கு நகம்பட்டு சேதமாகாமல் சாக்கிரதையாய் அனுபோகமுள்ள மருத்துவச்சியால் அங்குல பரிசைக்ஷ செய்யவேண்டும். சுகப்பிரசவத்திற்கு சிரசு முதலில் வரும். விரலுக்கு கெட்டியாய்த் தட்டுபடும். பிரசவமாவதற்கு கொஞ்சநேரஞ் செல்லுமென்று தோன்றினால் பால், காபி, அல்லது கஞ்சி கொடுக்கலாம். சகல விஷயங்களும் கிரமமாயிருக்கிறதென்று தோன்றினால் பனிக்குடம் உடையும்வரையில் அங்குலபரிசைக்ஷ செய்ய வேண்டியது அவசியமில்லை. பனிக்குடம் உடைந்த பிறகு பிரசவ ஸ்திரீயை நிர்வாணப்படுத்தி படுக்கவைத்து துப்பட்டியால் போர்த்துவிடவேண்டியது. இப்பொழுது நாபிக்கொடியைக் கட்ட கயிறும், இடுப்பைக் கட்ட ஒரு முழம் அகலமும் 4 முழம் நீளமுமுள்ள துணியும் சேகரிக்க வேண்டியது. சிசு யோனியிலிருந்து வெளிப்படும்போது யோனிக்கும் ஆசனத்திற்கும் மத்தியிலுள்ள இடத்தை மருத்துவச்சியானவள் தனது இடது உள்ளங்கையை அந்த ஸ்தானத்தின் மேல் வைத்து பெரு விரலையும் முன் விரலையும் *நிதம்பங்களின் ஓரமாய் நீட்டி ஆதரவாக மெதுவாயணைத்துத் தாங்கிக் கொண்டிருக்க வேண்டியது. அப்படித்தாங்காமல் அஜாக்கிரதையா யிருந்துவிட்டால் அந்த ஸ்தானம் வெடித்து யோனியிலிருந்து ஆசனபரியந்தம் துவாரத்தை உண்டாக்கி அதிகஷ்டத்தை விளைவிக்கும். சிசுவின் சிரசு உதயமான உடனே மருத்துவச்சியானவள் சிசுவின் கழுத்தை சோதிக்கவேண்டியது. சிசுவின் கழுத்தில் தொப்புட்கொடி சுற்றிக்கொண்டிருந்தால் அதை மெதுவாய் வெளிக்கிழுத்து பின்னலை அவிழ்த்து தோள்மேல் தள்ளிவிடவேண்டியது. அன்றியும், சிரசு பிரசவமான பிறகு,

---

*பனிக்குடத்திற்கு நகம்பட்டு உடைந்து போய்விட்டால் சிசு சீக்கிரத்தில் பிரசவமாகாது. ஆனால் சிசுவின் சிரசு கருப்பையிலிருந்து யோனியில் வந்திருக்குமாகில் அப்போது பனிக்குடத்தை நகத்தினாலாவது ஊசியினாலாவது உடைத்து நீரை வெளியாக்கினால் சீக்கிரத்தில் பிரசவமாகும்.

*நிதம்பங்கள் இன்னதென்பது 2-வது அத்தியாயத்தில் சொல்லியிருக்கிறோம்.

மருத்துவச்சியானவள் தனது கையை தாயின் வயிற்றின்மேல் வைத்து கருப்பையை அமுத்திப்பிடித்துக்கொண்டு கீழுக்கு மெதுவாய் தள்ளிக்கொண்டேபோக மாயை (நஞ்சு) பிரிந்து சீக்கிரத்தில் சிசு பிரசவமாகும். சிரசு உதயமான உடனே சிரசைப்பிடித்து இழுக்கலாகாது. பலவந்தமாய் இழுத்தால் சிசு ஜனித்தவுடனே கருப்பை சுறுங்காமல் உதிரப்பெருக்கு உண்டாகும். சில மருத்துவச்சிகள் தாங்கள் வெறுமனே உட்கார்ந்திருக்கக் கூடாது. உட்கார்ந்திருந்தால் அறையிலிருக்கும் ஸ்திரீகள் மதிக்கமாட்டார்களென்று அறிவில்லாமல் நினைத்து சிசுவின் சிரசைப்பிடித்து இழுத்து பாதை உண்டுபண்ணுவார்கள். ஆகையால் மருத்துவச்சிகள் அப்பேர்ப்பட்ட வேலை செய்யக்கூடாது. சிரசு உதயமாகி சற்றுநேரத்திற்குள் மற்ற பாகமும் பிரசவமாகாமல் தாமதித்தாலும் சரி, சிசுவின் முகம் கருத்து ரத்தங்கட்டினாலும் சரி, மருத்துவச்சியானவள் தாமதிக்காமல் உடனே கருப்பையை ஒரு கையால் அமுத்திப் பிடித்துக்கொண்டு, ஒரு விரலை சிசுவின் அக்குளில் குறடுபோல் வளைத்துப் பிடித்து மெதுவாய் இழுத்து சிசுவை வெளிப்படுத்த வேண்டியது. சிசுஜனித்தவுடனே சிசுவின் தேகத்தில் குளிர்ந்த காற்று படும்படி செய்தால் சிசு மூச்சு நிறுத்தி கால்களை உதறிக்கொண்டு செம்மையாய் அழும். சுவாசம் தாராளமாய் விடும். தொப்புட் கொடியில் நாடி நடை நின்ற பிறகு தொப்புளுக்கு 2 அங்குலம் விட்டு நாபிக்கொடியை ஒரு மெல்லிய கயிற்றால் பிகுவாய்க் கட்டி அக்கட்டுக்கு 3 அங்குலம் ஒட்டி வேறொரு கயிற்றால் கட்டி இவ்விரண்டு கட்டுகளுக்கும் மத்தியில் கத்தரியால் கத்தரித்து தாயையும் சிசுவையும் வேறுபடுத்தவேண்டியது. இப்படி நாபிக்கொடியை துண்டித்து சிசுவை வேறு படுத்தின பிறகு தாயின் வயிற்றில் இரட்டைப்பிள்ளைகள் உண்டா, இல்லையாவென்று தெரிந்துகொள்ள வேண்டியது. இரட்டைப்பிள்ளைகளிருந்தால் கஷ்டப்பிரசவத்தில் 2-வது நெம்பரில் சொல்லியவிதிகளை அனுசரிக்கவும். சிசு பிறந்தவுடனே மருத்துவச்சி தாயின் வயிற்றின் மேல் கையை வைத்து 30 நிமிஷம் வரையில் அழுத்திக்கொண்டிக்கவேண்டும். அப்படி அரை மணி நேரம் சென்றபிறகு ஒரு முழம் அகலமும் நாலு முழம் நீளமுமுள்ள துணியால் தாயின் வயிற்றைச் சுற்றி இழுத்துக்கட்ட வேண்டியது. இப்பொழுது ஒரு சுத்தமானயிடத்தில் துணியை மடித்துக்போட்டு அதின்மேல் சிசுவை படுக்கவைத்துவிட்டு மாயையை வெளியாக்க உபாயங்களைத் தேட வேண்டியது. தாயின் வயிற்றை எவ்வளவு அழுத்திக்கட்டுகிறோமோ

அவ்வளவு சீக்கிரத்தில் நஞ்சு விழுந்துவிடும். மாயை (நஞ்சு) விழுந்தபிறகு கட்டின துணியைப் பிகுப்படுத்தி அல்குலின் மேல் ஒரு சிறு துண்டுத் துணியை மடித்துப்போட்டு வைக்கவேண்டியது. சிசு பிரசவமான பிறகு, அரை மணி நேரம் வரையில் நஞ்சு தானாக விழுகிறதா வென்று எதிர்பார்க்கவேண்டும். கருப்பை சுருங்காமல் போனாலும் சரி, வியாதியால் நஞ்சு கருப்பையோடு ஒட்டிக்கொண்டாலும் சரி, அல்லது கருப்பை வக்கிரகதியாய் சுருங்கினாலும் சரி, நஞ்சுவிழாது. அரைமணி நேரத்திற்குள் நஞ்சு விழாவிட்டால் நாபிக்கொடியில் நாடிநடையிருக்கிறதா இல்லையாவென்று தெரிந்துகொள்ளவேண்டும். நாபிக்கொடி சில்லிட்டுப் போனால் நாபிக்கொடியில் நாடி நடை இல்லையென்றும் நஞ்சு கருப்பையைவிட்டு விட்டதென்றும் அறிந்துகொள்ள வேண்டியது. நாபிக்கொடியில் நாடி நடை இருக்கும் வரையில் நாபிக்கொடியைப் பிடித்திழுக்கலாகாது. கொடியில் நாடி நடை இல்லையென்று தெரியவந்த உடனே மருத்துவச்சியானவள் தாயின் வயிற்றை ஒரு கையால் அணைத்து கருப்பையைப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டியது. யோனியில் வலது கையின் 2-விரல்களைச் செலுத்தி நாபிக்கொடியை பிடித்துக்கொண்டு இடது கையால் வெளியிலிருந்து மெதுவாய் இழுத்தால் அத்துடன் நஞ்சும் வெளியே வரும். இந்த உபாயத்தால் நஞ்சு வெளிப்படுத்த முடியாவிட்டால் இடது கையால் தொப்புட்கொடியைப் பிடித்துக்கொண்டு வலதுகையின் விரல்களை கூச்சாகக்குவித்து தொப்புட்கொடி மார்க்கமாய் யோனியில் விட்டு கர்ப்பாசயத்திற்குள் கொண்டு போய் தடவிப்பார்த்து மாயையை அணைந்திருக்கும் ஸ்தானத்தை அறிந்து விரல்களால் பேர்த்து வெளிப்படுத்தவேண்டியது. நஞ்சு விழுந்த பிறகு தாயின் கருப்பையின் மேல் துணியை மடித்துப் போட்டு அதின்மேல் ஒரு முழம் அகலமும் 4 முழம் நீளமுமுள்ள துணியால் இடுப்பை செவ்வையாயிழுத்துக் கட்டவேண்டியது. அன்றியும் வயிற்றை ஒரு துணியால் செவ்வையாய்க் கட்டவும். தாயைப் படுக்கையில்தான் வைக்கவேண்டியது. பிரசவித்தபிறகு தாயின் நாடி பலஹீனமாய் நடந்தால் பரிமள நவக்ஷாரஜெயநீர் 10 முதல் 20 துளி ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கலந்து கொடுக்கவும். வயிற்றில் நோய் அதிகமாயிருந்தால் அதை நிவர்த்திக்க 10 முதல் 15 துளி அபினித்திராவகம் ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கலந்து கொடுக்கவும். உதிரம் அதிகமாய் வடிந்தால் அது நிற்க 25 முதல் 35 துளி ஏர்கட் எக்ஸ்ராக்ட் ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கலந்து கொடுக்கவும். இப்பொழுது சிசுவை எடுத்து வெந்நீரில்

குளிப்பாட்டி சுத்தமான துணியால் செவ்வையாய்த் துடைத்து வேறொரு ஈரமில்லாத சுத்தமான துணியை மடித்து அதின்மேல் சிசுவைப் படுக்கவைக்க வேண்டியது.

சுகப்பிரசவத்தில் ஸ்திரீக்கு உண்டாகும் சகல அபாயங்களை மருத்துவச்சியாலும் மருத்துவவைத்தியராலும் நிவர்த்தி செய்யும்படியான உபாயங்களைச் சொல்லலாயிற்று. இனி மருத்துவச்சியும் மருத்துவ வைத்தியரும் கஷ்டப்பிரசவம், அதிகஷ்டப் பிரசவம், அசாத்திய பிரசவம் இவைகளை நாம் இக்கிரந்தத்தில் விரிவாக சொல்லியிருக்கிறோம். அவைகளில் சொல்லிய சகல விஷயங்களையும் செம்மையாய் நிதானித்து அறிந்து ஞாபகத்தில் வைத்துக் கொண்டு உச்சிதமாய் புத்தியால் உபயோகித்து தாயாருக்கு யாதொரு அபாயம் சம்பவிக்காமலிருக்கும்படியாயும் சிசுவுக்கு ஜீவஹானி உண்டாகாமலிருக்கும் படியாயும் கூடியவரையில் பிரயாசையை எடுத்துக் கொள்ள வேண்டியது.

2-வது அத்தியாயம்.

இதுவரையிலும் மருத்துவச்சி அல்லது மருத்துவ வைத்தியர் பிரசவ சிகிச்சையில் கவனிக்க வேண்டிய விஷயங்களைப்பற்றியும், இன்னும் பல விஷயங்களையும் கூறினோம். இனி ஸ்திரீகளின் ஜனன உறுப்புகளையும் இன்னும் பற்பல விஷயங்களையும் இந்த அத்தியாயத்தில் சொல்வோம்.

ஸ்திரீயின் ஜனன இந்திரியங்கள்.

1. அல்குல் அதாவது குய்யம்:- இது ஏழு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

(1) கடிதடம்:- இது அடி வயிற்றின்கீழ் மேடாயும், மிருதுவாயும் இருக்கும் ஸ்தானம்.

(2) நிதம்பம்:- இது கடிதடத்திற்கு கீழ் பிளந்து பக்கத்திற்கு ஒன்றாய் சருமம் மடித்துக் கொண்டிருக்கும் ஸ்தானம்.

(3) காமத்வஜம்:- இது கடிதடத்திற்கு கீழும் நிதம்பங்களுக்கு மேலும் கூர்மையுள்ள உறுப்பு.

(4) மூத்திரத்துவாரம்:- இது காமத்வஜத்திற்கு கீழும் யோனிவாசலுக்கு மேலும் இருக்கிற பள்ளத்திலுள்ள துவாரம்.

(5) சந்திரநாடி:- இது நிதம்பங்களுக்கு அகத்தில் நீளமாய் மடித்துக் கொண்டிருக்கும் சவ்வு.

(6) யோனிவாசல்:- இது காமத்வஜத்திற்கு கொஞ்சம் பின்னிட்டிருக்கும் துவாரம்.

(7) அல்குல் பிளவு:- இது நிதம்பங்களின் நடுவிலிருக்கிற பிளப்பின் உட் ஸ்தானம், இது 3 முதல் 6 அங்குலம் நீளமுள்ளது.

2. **கருப்பை அதாவது கருப்பாசயம்** :- இது சூபகம், மலக்குடல், நீர்ப்பை இவைகளுக்கு நடுவிலும், ஈரல்களுக்கு பக்கத்திலும், அடிவயிற்றின் மத்திலும் உண்டாக்கப்பட்டு நீர்ப்பைக்கும் குடலுக்கும் நடுவில் தொங்கிக்கொண்டிருக்கின்றது. இக்கருப்பைக்குள் கருக்குழி என்று ஓர் முக்கோணமான பள்ளமுண்டு. இம்முக்கோணத்தின் ஒரு முனை கருப்பையின் துவாரத்தோடும், மற்ற இரண்டு முனைகள் நாதக் குழல்களோடும் இணைக்கப்பட்டிருக்கின்றன. தேகத்திலுள்ள அசுத்தமான உதிரத்தை நாளாவட்டத்தில் வெளிப்படுத்துவதும் விந்துவைச்சேகரித்து பிண்டத்தை வளர்த்து வெளிப்படுத்துவதும் கருப்பாசயத்தினால்தான்.

3. **சினைப்பைகள்**:- இச்சினைப்பைகள் கருப்பையின் இரு பக்கங்களிலும் பக்கத்திற்கு ஒன்றாக உண்டாக்கப்பட்டிருக்கின்றன.

4. **நாதக்குழல்**:- இது தாரைப்போல் நீளமாயிருக்கும். கருப் பாசயத்தின் இருபக்கங்களிலும் பக்கத்திற்கு ஒன்றாக இருக்கின்றது. இக்குழலின் ஒருமுனை கர்ப்பாசயத்தின் மேல் முனையோடும் மற்றொன்று கருக்குழியோடும் இணைக்கப்பட்டிருக்கின்றது.

5. **நாதக்குமிழ்கள்**:- ஒவ்வொரு சினைப்பையிலும் 10 முதல் 30 நாதக்குமிழ்களும், ஒவ்வொரு நாதக்குமிழிலும் நாதமென்னும் ஓர் சிறு குமிழும், ஒவ்வொரு சிறு குமிழிலும் கரு என்னும் ஓர் சிறு புள்ளியுமுண்டு.

3-வது அத்தியாயம்.

இது வரையிலும் ஸ்திரீகளின் ஜனன உறுப்புகளைப்பற்றி சொல்லலாயிற்று. இனி அவ்வுறுப்புகளினாலுண்டாகும் நன்மைகளைப்பற்றிச் சொல்லுவோம்.

ஸ்திரீகள் புஷ்பவதியாகிற விஷயம்.

ஸ்திரீகள் புஷ்பவதி அதாவது ருது ஆவதற்கு முன் கருத்தரிக்க மாட்டார்கள். உஷ்ணதேசத்தில் வசிக்கிற ஸ்திரீகள் 10 முதல் 15 வயதிற்குள்ளும், சீதளதேசத்தில் வசிக்கிற ஸ்திரீகள் 15 முதல் 20 வயதிற்குள்ளும் ருதுவாகிறது வழக்கம். புஷ்பவதியாகிறதென்றால் ஸ்திரீகளின் ஒவ்வொரு சினைப்பையிலிருந்து ஒவ்வொரு நாதக்குமிழ் பெரிதாய் வெடித்து அதிலிருக்கும் நாதமானது நாதக்குழல் மார்க்கமாய் கருப்பையில் சென்று சோணிதத்தோடு கலந்து குய்யத்தின் வழியாய் வெளிப்படுகின்றதுதான். இப்படி வெளிப்படுந் திரவமானது ஓர் சிவந்த ஜலம். இத்திரவம் ஸ்திரீகள் ருதுவான நாள் முதல் 30 வருஷகாலம் வரையிலும், 28 நாளுக்கு ஒரு தடவை ஸ்திரீகளுக்கு வெளிப்படும். சோணிதம் கிரமத்திலிருந்தால் மட்டுந்தான் ஸ்திரீகளின் தேகத்திலுள்ள சர்வ கருவிகளும் சுகஸ்திதியிலிருக்கும். கிரமமாக மாதாமாதம் சோணிதம் வெளிப்படாவிட்டால் ஸ்திரீகளுக்கு அநேக ரோகங்கள் உண்டாகும்.

சம்போகமும் பிரசோற்பத்தியும்.

புருஷனுடைய இந்திரியமானது பீஜப்பிரதேசத்தில் பக்குவமாகும். அப்படி பக்குவமான இந்திரியம் இந்திரிய பாத்திரத்தில் வந்து சேரும். அந்த இந்திரிய பாத்திரத்தில் ஒரு விதமான ஆவி உண்டாகும்போது விந்துவை வெளியாக்க செய்யும் இச்சையே காம இச்சை. புருஷன் ஸ்திரீயுடன் சம்போகஞ் செய்வதால் பிரசோற்பத்தியும் ஆரோக்கியமும் உண்டாகும். ஆதலால் 16 வயதுள்ள ஸ்திரீயும் 25 வயதுள்ள புருஷனும் சரீர முழுவதும் மறைப்பில்லாமல் ஆசை ஒன்றாகி அன்போடு வாரத்திற்கு இரண்டு நாள் இராக்காலத்தில் புணரவேண்டியது. இப்படி புணர்ந்தால் குழந்தையின் தேகம் திடமாயிருப்பதுமன்றி தாய் தந்தைகளின் தேகமும்

வெகு திடமாயிருக்கும். மாதாந்த ருது கண்ட முதல் 12 நாள் வரையில் கருப்பையின் துவாரம் இராகாலத்தில் தாமரைப்பூவைப் போல் மூடிக்கொள்ளாமல் இருக்கும். ஆனால் முதல் 3 நாள்களில் கருப்பையின் முகத்துவாரமாகிய யோனித்துவாரம் அதிகமாய் திறந்திருப்பதால் சுக்கிலம் அதிகமாய்ச் செல்லுகிறது. அப்பொழுது சுக்கிலமும் சோணிதமும் சமமாய்த்திரண்டு அலிப்பிள்ளைகள் பிறக்கின்றன. அந்த காரணத்தினாலேதான் முதல் 3 நாள் சேரக்கூடாதென்றும் மற்ற நாள்களில் இரட்டித்த நாட்களில் சேர்ந்தால் ஆணாகவும் ஒற்றைப்பட நாட்களில் சேர்ந்தால் பெண்ணாகவும் பிண்டோற்பத்தி உண்டாகும். சம்போகஞ் செய்யும்போது வெளிப்பட்ட இந்திரியத்திலிருக்கிற இந்திரிய கிருமிகளில் ஒன்று நாதக்குமிழிலுள்ள நாதத்தோடு சேர்ந்தால் கருத்தரிக்கும். இவ்விதமாக எத்தனை இந்திரியக்கிருமிகள் நாதத்தோடு வெவ்வேறாக சேர்கின்றதோ அத்தனையும் கருத்தரித்து தனித்தனியாக விருத்தி அடையும்.

சரீரத்திலும், கருப்பையிலும் யாதொரு வியாதியுமில்லாமலிருக்கையில் கருத்தரிக்காமலிருக்கின்ற விஷயம் என்னவென்றால் ஸ்திரீ புருஷர்கள் சம்போகத்தின் பிறகு அடியில் சொல்லிய ஐந்துவிதிகளை அனுசரிக்காமலிருப்பதினால்தான் சந்தான விருத்தி உண்டாகத் தடைப்படுகின்றது. சந்தான விருத்தி உண்டாகவேண்டுமென்று கருத்துள்ளவர்கள் அடியில் சொல்லிய ஐந்து விதிகளை அனுசரிக்க வேண்டியது.

1. அடிக்கடி சம்போகஞ்செய்யக்கூடாது.

காரணம்:- சம்போகஞ் செய்வதினால் கருப்பாசயத்தின் முன்புறஞ் சலனப்படுகின்ற தென்பது தெரிந்த விஷயமல்லவா, அப்படியிருக்க அடிக்கடி புணர்வதினால் கருவின் முன்பக்கஞ் சலனமுண்டாகி விந்து வெளிப்படுகின்றது.

2. சம்போகஞ் செய்த தினம் பேதிமருந்துகளைச் சாப்பிடக்கூடாது.

காரணம்:- மலச்சுத்தியாவதினால் குடல்களின் பலம் குறைந்துபோக, கருப்பையின் பலமும் குறைந்துபோகின்றது. கருப்பையின் பலம் குறைந்துபோக விந்து நழுவுகின்றது.

3. சம்போகஞ்செய்த பிறகு ஸ்திரீ அதிக வேலையைச் செய்யக்கூடாது. அன்றியும் அதிக பசியாயிருக்கக் கூடாது.

காரணம்:- மேற்படி செய்கைகளால் அதிஉஷ்ண முண்டாவதினால் விந்து கருப்பையிலிருந்து நழுவுகின்றது.

4. புணர்ச்சியின் காலத்திலும் புணர்ச்சியின் பிறகும் ஸ்திரீ அதி பயப்படுதல், அதி துக்கப்படுதல், அதி கோபமடைதல் முதலியவைகள் கூடாது.

காரணம்:- மனதுக்கு சந்தோஷமும் ஆனந்தமுமில்லாததினால் கருப்பையில் விந்து தங்காமல் வெளிப்படுகின்றது.

5. சம்போகம் முடிந்தவுடனே ஸ்திரீ எழுந்து நிற்கக்கூடாது.

காரணம்:- புணர்ச்சியின் முடிவில் ஸ்திரீயின் நாதமும் புருஷனின் விந்தும் கூடியும் கூடாமலும் இருக்கும் தருணத்தில் எழுந்து செல்வதனால் நாதமும் விந்தும் வெளிப்படுகின்றன. ஆதலால் போகத்தின் பிறகு 10 நிமிஷம் வரையில் படுக்கையில் தானிருக்க வேண்டியது.

பிண்டம் விருத்தி அடைவதும், கருத்தரித்த மாதக்கிரமமாய் தோன்றும் குறிகளும் அடியில் காண்க.

மாதம்	பிண்டம் விருத்தி அடையும் விபரம்	கருத்தரித்தால் கிரமமாய் தோன்றும் குறிகள்.
1.	கரு கொஞ்ச நாள் சென்ற பிறகு கர்ப்பாசயத்தில் வந்து பிண்டப்பையில் ஒரு உருண்ட அணுரூபமாக காணப் படும். முதல் மாதத்தின் கடைசியில் அவ்வணு ரூபமானது அரை அங்குலம் நீண்டு ஒழுங்காய் கருப்பையைச் சேர்ந்த ஓர் சவ்வின் கீழ்ப் பாகத்தில் ஒரு சிறு கொடியால் சம்பந்திக்கப்பட்டிருக்கும். நீர்ப்பையும் கல்லீரலும் சொற்ப பெரிதாயும், வாயானது ஒரு பள்ளமான கீற்றாயும், இரண்டு கண்கள் இரண்டு கரும் புள்ளிகளுள்ளதாயுந் தோற்றப் படும்.	வாயில் ஜலம் ஊறும், வாந்தியாகும், சாப்பாடு செல்லாது.
2.	கரு வளர்ந்து சிரசு, கை, கால் தோற்றப்படும். தொப்புள் கொடியினுடைய 2-இரத்தக் குழல்களுப் நரம்புகளும் தொப்புளிலிருந்து குழந்தையினுடைய குடலிற்குப்போய் சேரும். இருதயம், ஆண்குறி, பெண்குறி இவைகள் தோற்றப் படும். இந்த மாதத்தின் கடைசியில் பிண்டம் ஒன்றரை அங்குலம் நீளமுள்ள தாயிருக்கும்.	மேற்படி குறி களுடன் முலைக்காம்பு கருத்திருக்கும், ஸ்தனங் களில் நோய், கட்டி, பச்சை நரம்பு களில் தடிப்பு.
3.	பிண்டம் இந்தமாதத்தின் கடைசியில் இரண்டரை அங்குலம் நீள மாயிருக்கும். நுரையீரல், கல்லீரல், மண்ணீரல், இரைப்பை, குடல்	வயிறும், ஸ்தனங்களும் பெருக்கும். முலைக் காம்பை நசுக்கினால் பால்வரும். ஸ்டெதஸ்

மாதம்	பிண்டம் விருத்தி அடையும் விபரம்	கருத்தரித்தால் கிரமமாய் தோன்றும் குறிகள்.
	இவைகளின் அவயவங்கள் உற்பத்தியாகும். ஜனன இந்திரியங்கள், நாசி, காது இவைகள் காணப்படும்.	கோபு (Stethoscope) அடி வயிற்றின் மேல் வைத்து காதுவைத்துக் கேட்டால்பிண்டத்திற்கு போகும் இரத்தத்தின் சத்தம் கேட்கும்.
4.	பிண்டம் இந்த மாதத்தின் கடைசியில் ஐந்தரை அங்குலம் நீளமும் இரண்டரை பலம் நிறையும் உள்ளதாயிருக்கும். ஆண் பெண் குறிகள் தெளிவாய்க் காணலாம். வாயும் ஆசனமும் திறந்திருக்கும்.	பிண்டமசைகிறது தாய்க்கு தெரியும். ஸ்டெதஸ்கோப்பு தொப்புள் சமீபத்தில் வைத்துக் கேட்டால் சிசுவின் மார்பு துடிப்பது கேட்கும். அது ஒரு மினிட்டுக்கு 130-150 தடவை துடிக்கும்.
5.	பிண்டம், இந்த மாதத்தின் கடைசியில் சிரசு, இரத்தாசயம், குண்டிக்காய்கள் இவைகள் பெரிதாயிருக்கும். நகம், ரோமம் நன்றாய்க் காணப்படும். பித்தப்பை நன்றாயிருக்கும்.	அடிவயிறு பெரிதாகி முன்னுக்கு வந்திருக்கும். மர்மஸ்தானத்தில் விரலால் மேலே தூக்கினால் கீழே யிருக்கும் சிசு கர்ப்ப ஜலத்தின் மேல்கிளம்பி விரலுக்கு தென்படும்.
6.	பிண்டம் இந்த மாதத்தின் கடைசியில் 9 அங்குலம் நீளமும் 13 பலம் நிறையுமுள்ளதாயிருக்கும். பித்தப்பையில் கொஞ்சம் ஜலமிருக்கும். கல்லீரல் பெரிதாயும் சிவப்பாயும் காணப்படும்.	தொப்புள் கொடியில் ரத்தம் பரவுகிறது கேட்கும்.

மாதம்	பிண்டம் விருத்தி அடையும் விபரம்	கருத்தரித்தால் கிரமமாய் தோன்றும் குறிகள்.
	பீஜங்கள் காணப்படும். பெருங் குடலில் மலமிருக்கும். கண் ரெப்பைகள் மூடியிருக்கும்.	
7.	பிண்டம் இந்த மாதத்தின் கடைசியில் 13 அங்குல நீளமும் 40 பலம் நிறையுள்ளதாயிருக்கும். பித்தப் பையில் பித்தமும், நகம் தெளிவாயும் மூளை அழுத்தமாகவும் சிவப்பாகவும், பீஜங்கள் இறங்கியும் குண்டிக்காய்கள் கெட்டியாயுமிருக்கும்.	அடிவயிறு பெரிதாகி 2-3 விரற்கடை தொப்புள் முன்னுக்கு வந்திருக்கும்.
8.	பிண்டம் இந்த மாதத்தின் கடைசியில் 15 அங்குலம் நீளமும் 58 பலம் நிறையுள்ளதாய் இருக்கும். மூளையில் ரேகைகள் காணப்படும். நகங்கள் கெட்டியாகவும் தோல் வெண்பாசு படர்ந்தது போலும் இருக்கும்.	மர்மஸ்தானத்தில் விரலால் பரிட்சிக்க சிசுவின் தலை தென்படும். கையை கருப்பையின் மேல் வைத்தால் சிசு திரும்புகிறது தெரியும்.
9.	பிண்டம் இந்த மாதத்தில் 18 முதல் 20 அங்குலம் நீளமும் 80 முதல் 90 பலம் நிறையுள்ளதாயுமிருக்கும். பீஜம் அடியில் இறங்கியும், தொப்புட்கொடி தலைக்கும் பாதங்களுக்கும் மத்தியிலும், மூளை வெள்ளையாயும் சாம்பல் வர்ணமாயும் வரிகள் தெளிவாயும் தோற்றும்.	4-வது மாதம் முதல் 8-வது மாதம் வரையில் காணப்பட்ட குறிகள் எல்லாஞ் செவ்வையாய் தெரியும்.
10.	மேற்படி மேற்படி	மர்ம ஸ்தானத்தி லிருந்து வெள்ளை நிறமான பிசின் போல் திரவம் வந்து கொண்டே யிருக்கும். இந்த மாதம் ஆரம்பத்தில் ஸ்திரீகள் பிரசவிப்பார்கள்.

கர்ப்பத்தில் உண்டாயிருக்கும் சிசு புருஷ பிரஜை அல்லது ஸ்திரீ பிரஜை என்று அடியில் சொல்லிய குறிகளால் அறிந்து கொள்க.

புருஷ பிரஜையின் குறிகள்.	ஸ்திரீ பிரஜையின் குறிகள்.
1. கர்ப்பஸ்திரீ அடிக்கடி வலது கையை ஊனுவாள்.	1. கர்ப்பஸ்திரீ அடிக்கடி இடது கையை ஊனுவாள்.
2. வயிறு உயரமாகவும் நட்டமாகவு மிருக்கும்.	2. வயிறு மட்டமாயும் சரிவாகவு மிருக்கும்.
3. சிசு கர்ப்பத்தின் வலது பக்கத்தி லிருப்பது தாய்க்கு தெரியும்.	3. சிசு கர்ப்பத்தின் இடது பக்கத்திலிருப்பது தாய்க்கு தெரியும்.
4. வலது ஸ்தனம் அதிகமாய் கறுத்து விம்மி வெண்மையாயிருக்கும்.	4. இடது ஸ்தனம் அதிக கறுத்து விம்மி வெண்மையாயிருக்கும்.
5. ஒரு ஏனத்தில் சுத்த ஜலம் வார்த்து கர்ப்பவதியின் முலைப்பாலில் ஒரு துளி விடவும். அது பரவி மிதக்கும்.	5. ஒரு ஏனத்தில் சுத்த ஜலம் விட்டு கர்ப்பஸ்திரீயின் முலைப் பாலில் ஒரு துளிவிடவும். அது அப்படியே உள்ளே அழுந்திப் போய்விடும்.

4-வது அத்தியாயம்.

இதுவரையிலும் ஸ்திரீஜனன இந்திரியங்களைப்பற்றியும், ஸ்திரீகள் புஷ்பவதியாகிற விஷயத்தையும், சம்போகத்தையும், பிரசொற்பத்தியையும், விவரமாய்ச் சொல்லலாயிற்று. இனி ஸ்திரீகள் கருத்தரித்தது முதல் பிரசவமாகும் வரையில் அதாவது 280 நாள்களில் கர்ப்ப ஸ்திரீக்கு சம்பவிக்கும் வியாதிகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு அதி அனுபோகமுள்ளதும் சிலாக்கியமானதுமான ஔஷதங்களை அடியில் கூறுவோம்.

கர்ப்ப ஸ்திரீகளுக்குக் காணும் காலை வாந்தி.

காரணம்: ஆகாரம் அதிகமாய் சாப்பிடுவதால் இரத்தமதிகமாகி பரவி கருவிற்கு ஏதாயினும் தீங்கு விளைவிக்குமென்று கடவுள் அதிக ஆகாரம் செல்லாமலும் வாந்தியாகும்படியாயுஞ் செய்திருக்கிறார்.

நிவர்த்தி:- இங்குலுவின் (Ingluvin) 1 முதல் 2 கிறேன்ஸ் வீதம் 15 நாள் கொடுத்துவர ஆகாரம் ஜீரணித்து வாந்தி நிற்கும். காலை 6 மணிக்கு கொஞ்சம் கஞ்சியைச் சாப்பிட்டால் வாந்தியாகாது.

கர்ப்ப ஸ்திரீகளுக்குக் காணும் இருமல்.

காரணம்:- ஜீரணிக்காத வஸ்துக்களைச் சாப்பிடுவதினாலுண்டாகின்றது.

நிவர்த்தி:- போஸ்துக்காய் விரா 10, கசகசா விரா 40 இவைகள் இரண்டு தனித்தனியே பொடி செய்து கால்ப்படி ஜலத்திலிட்டு காய்ச்சி இறக்கி நன்றாய் பிசைந்து வடிக்கட்டி பசும்பாலைக் காய்ச்சின ஆடை படி 1 சேர்த்து, அந்த ஆடை முறியும் சமயத்தில் 16 பலம் சீனியைச்சேர்த்து இளம் பாகுபதத்திலிறக்கி தினம் காலை மாலை ஒவ்வொரு பலமாக சாப்பிட்டு வந்தால் இருமல் குணமாகும்.

கர்ப்ப ஸ்திரீகளுக்குக் காணும் மூர்ச்சை.

காரணம்:- பலஹீனத்தால் இவ்வியாதி உண்டாகும்.

லக்ஷணம்:- தேக உழைப்பில்லாத கர்ப்ப ஸ்திரீக்கு 5-வது மாதத்தில் மூர்ச்சை காணுவதுண்டு. காதில் ஓர்வித சத்தங்காணும், கண்

பஞ்சடையும், மூர்ச்சை தீர்ந்தபின் கை கால்களில் சீதளம், நாடியில் நடை இல்லாமை, ஸ்மரணையில்லாமை இவைகள் காணும்.

நிவர்த்தி:- மூர்ச்சை அடைந்த ஸ்திரீயின்பேரில் நல்ல காற்று பரவும்படி செய்யவும். கர்ப்பூரத் தைலத்தை உள்ளங்காலிலிட்டு தேய்க்கவும். மூர்ச்சை கொஞ்சம் தீர்ந்தபிறகு பரிமளநவக்ஷாரஜெயநீர் (Aromatic spirit Ammonia) 10 முதல் 20 துளி ஒரு அவுன்ஸ் ஜலத்தில் சேர்த்து கொடுக்கவும். மூர்ச்சை பூர்த்தியாய் தீர்ந்த பிறகு மலசுத்தி செம்மையாய்யாகும்படி விரேசனகாரியைக் கொடுத்து பிறகு அயசம்பந்தமான மருந்துகளைக் கொடுத்து பலம் வரும்படி செய்யவேண்டும்.

கர்ப்ப ஸ்திரீகளுக்குக் காணும் மலக்கட்டு.

காரணம்:- வாயு பதார்த்தங்களைச் சாப்பிடுவதினாலுண்டாகின்றது.

நிவர்த்தி :- 2 முதல் 3 கிராம் ஸெயிட்லிட்ஜ் உப்பை (Seidlitz salt) 4 அவுன்ஸ் ஜலத்தில் கரைத்து கொடுக்க மலசுத்தியாகும். இம்மருந்தினால் பிரயோஜனமில்லாவிட்டால் சிற்றாமணக்கெண்ணெய் 2 முதல் 3 அவுன்ஸ் அரை சேர் சுக்கு கசாயத்தில் சேர்த்துக் கொடுக்க மலசுத்தியாகும்.

கர்ப்பவதிகளுக்குக் காணும் பேதி.

காரணம் :- ஜீரணிக்காத வஸ்துக்களைச் சாப்பிடு வதினாலுண்டாகின்றது.

நிவர்த்தி :- கிளோரொடைன் (Chlorodyne) 10 முதல் 15 துளி ஒரு அவுன்ஸ் ஜலத்தில் சேர்த்து கொடுக்க பேதி நிற்கும். இது சிலருக்கு 2 தடவையும் சிலருக்கு 7-8 தடவையும் கொடுக்க வேண்டியதாயிருக்கும். தினம் காலை, மத்தியானம், சாயந்திரம் கொடுக்க வேண்டும்.

கர்ப்பவதிகளுக்குக் காணும் நீர்க்கட்டு.

காரணம்:- சில கர்ப்ப ஸ்திரீகளுக்கு 9-வது மாதத்தில் மூத்திரம் இறங்காமலிருப்பது முண்டு. கர்ப்பாசயத்தின் பளு மூத்திரப்பையின்மேல் விழுந்து நீர் துவாரம் தடைப்பட்டு நீர்க்கட்டு உண்டாகின்றது.

லக்ஷணம்:- வயிற்றுப்பல், அடிவயிறு வலித்தல், முக்குதல்.

நிவர்த்தி:- கர்ப்பாசயம் சரிந்திருக்குமாயின் ஓர் நீளமான வஸ்திரத்தால் அடி வயிற்றை தூக்கி கட்ட நீரிறங்கும். சலாக்கினால் நீரை வெளியாக்கலாம்.

கர்ப்பவதிகளுக்குக் காணும் மார்பு எரிவு - புளி ஏப்பம்.

காரணம்:- ஜீரணிக்காத பதார்த்தங்களைச் சாப்பிடுவதினால் உண்டாகும்.

நிவர்த்தி:- சோடாஜலம் (Soda water) 1 முதல் 2 அவுன்ஸ் அரை சேர் காய்ச்சின பாலிலிட்டு கொடுக்கவும். இதை தினம் காலையிலும் மாலையிலும் 3 நாள் கொடுக்க குணமாகும்.

கர்ப்பவதிகளுக்குக் காணும் மஞ்சட்காமாலை.

காரணம்:- பித்தம் அதிகரிப்பதினாலுண்டாகும்.

லக்ஷணம்:- இரத்தத்தில் பரவியிருக்கும் பித்தத்தை வெளியாக்க பித்தாசயத்துக்கு சக்தி குறைந்து போவதினால் மேற்படி பித்தம் சரீரமுற்றிலும் வியாபித்து கண்விழி, நகங்கள், இவைகளில் மஞ்சள் நிறத்தையுண்டாக்கும். அன்றியும் சுரம் வரும், குளிர் காணும். நீர் மஞ்சள் நிறமாய் இறங்கும்.

நிவர்த்தி:- 6 கிரென்ஸ் ரசமொழுகு (Blue pill) மாத்திரையாக்கி காலையில் 2 நாள் கொடுக்கவும். செம்மையாய் மல சுத்தியாகும். பிறகு சொர்ண பேதித்திராவகம் (Nitro-Hydrochloric Acid diluted) 10 துளியை 2 அவுன்ஸ் நிலவேம்பு கசாயத்தில் சேர்த்து கொடுக்கவும். இவ்விதமாக தினம் 2 அல்லது 3 தடவை கொடுக்கவேண்டும்.

கர்ப்பவதிக்கு காணும் கால்வீக்கம், சரீர வீக்கம்.

காரணம்:- கர்ப்ப ஸ்திரீயின் மூத்திரத்தில் மஷ்ட்டு விசேஷமாயிருந்தால் கால் வீங்கும், சரீரம் வீங்கும். மூத்திரத்தில் மஷ்ட்டு

இருக்கிறதுமில்லாததும் அறிய கர்ப்ப ஸ்திரீயின் மூத்திரத்தைக் காய்ச்சிப்பார்த்தால் வெள்ளை மஷ்ட்டு அடியில் படியும்.

லக்ஷணம்:- தலை, கழுத்து நரம்பு இவைகளில் நோவு, முகம் வெளுப்பு, மூத்திரம் சொற்பமாய் இறங்கும், பார்வை குறைவு, சுரம் அடிக்கும், தகுந்த சிகிச்சை செய்யாவிட்டால் பிரசவகாலத்தில் ஜன்னி, இழுப்பு, இரத்தப்பிரவாகம் இவைகளைக்கண்டு அபாயம் நேரிடும். சிலவேளை கர்ப்பங்கரைந்து போவதுமுண்டு.

நிவர்த்தி:- வீக்கங்கண்ட உடனே செம்மையாய் பேதியாகும்படி விரேசனகாரிகளைக் கொடுக்க வேண்டியது. பிறகு அயத்திராவகம் 10-முதல் 20 துளி ஒரு அவுன்ஸ் சுத்த ஜலத்தில் கலந்து தினம் மூன்று தடவைக் கொடுக்க வேண்டியது. அன்றியும் ஜின்சாராயம் அரை அவுன்ஸும் ஜலம் அரை அவுன்ஸும் சேர்த்து 3 மணி நேரத்திற்கு ஒரு தடவை அதாவது தினம் 4 தடவை கொடுக்கவேண்டியது. ஆனால் மேற்படி சாராயம் கர்ப்பஸ்திரீயின் தேக கூறு அறிந்து மேற்படி அளவுக்கு அதிகமாவது அல்லது குறைத்தாவது கொடுக்க வேண்டும். கர்ப்பஸ்திரீ இச்சாபத்தியத்தி லிருக்கவேண்டியது.

கர்ப்பவதிக்கு மூத்திரம் துளித்துளியாய் இறங்குதல்

காரணம்:- மூத்திரப்பையின் மேல் கர்ப்பாசயத்தின் பாரத்தை விழுவதினால் மூத்திரம் துளித் துளியா யிறங்குகின்றது.

லக்ஷணம்:- துளித்துளியாய் மூத்திரமிறங்கும். உடுத்திருக்கின்ற வஸ்திரம் நனைந்துபோகும். மூத்திரம் தொடை முதலிய மர்மஸ்தானங்களில் அடிக்கடி பட்டு தோல் உரிந்து எரிச்சல் உண்டாகும். சிலருக்கு இருமல் காணும்.

நிவர்த்தி:- இப்பொழுது மூத்திரத்தில் புளிப்பு உண்டா அதாவது மூத்திரம் புளிப்பு அடிக்கிறதாவென்று தெரிந்து கொள்ளவேண்டியது. அப்படி அடித்தால் பை கார்போனெட் சோடா 20 கிறேன்ஸ் ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கரைத்து தினம் 3 தடவைக் கொடுக்க வேண்டியது. இப்படி கொடுப்பதினால் மூத்திரத்திலிருக்கிற புளிப்பு நீங்கும். மலசுத்தி கிரமமாய் ஆகாவிட்டால் ஒரு பலம் சிற்றாமணக்கெண்ணெய்யைக்

கொடுத்து துர்நீரையும் துர்மலத்தையும் வெளியாக்கவேண்டியது. சுத்தமான வெள்ளை வஸ்திரம் கிழித்த துண்டுகளை மர்மஸ்தானத்தில் போட்டால் நீரை இழுத்துவிடும். மேல்தோல் உரிந்து புண்ணாயிருக்கும் ஸ்தலத்திற்கு துத்தநாகபிளாஸ்திரி (Zinc ointment) யை சுத்தமான துணியின் மேல் தடவிப்போடவும். மூத்திரம் படுகின்ற ஸ்தானங்களை செவ்வையாய் ஜலத்தால் கழுவி சுத்தமாய் வைத்திருப்பதுடன் வெள்ளை மாக்னிஷியா பொடியை அந்த ஸ்தானத்தின் மேல் போட வேண்டியது. அன்றியும் இந்த ஸ்திரீ படுக்கையில்தான் இருக்கவேண்டும். ஏனெனில் கர்ப்பாசயத்தின் பாரம் மூத்திரப்பையின் மேல் விழாமலிருக்கும். இப்போது டிங்சர் ஐய்யாசாமஸ் (Tincture Hyoscyamus) யுடன் அபினி சேர்ந்த ஔஷதம் சேர்த்துக்கொடுக்க வேண்டும்.

கர்ப்பவதிக்குக் காணும் பல்வாயு, பல்வலி.

காரணம்:- கர்ப்ப ஸ்திரீகளில் சிலருக்கு முதல் நான்கு மாதங்களில் வாயு பற்களில் தங்கி அதி உபத்திரவத்தைச் செய்யும்.

நிவர்த்தி:- ஒரு சிறு குச்சிக்கு பருத்தியைச் சுற்றி கிரியஸோட் ஆயிலில் (Creasote oil) நனைத்து வீக்கத்தின் பேரிலும் நோயுள்ள இடத்திலும் தடவி வர குணமாகும்.

கர்ப்பவதிக்குக் காணும் சிரோரோகங்கள்.

காரணம்:- ஈரத்தில் நடமாடுதல், வெயிலில் திரிதல், மழையில் நனைதல், மலபந்தம் இவைகளால் சிரோரோகங்களுண்டாகின்றன.

நிவர்த்தி:- சுக்குத்தூள், கடுக்காய்த்தூள், வகைக்கு விரா 1, நிலாவரை விரா 4, ஜலம் சேர் 1, இவைகளைச் சேர்த்துக்காய்ச்சி வடிகட்டி அதில் சிற்றாமணக்கெண்ணெய் பலம் 2 விட்டு சாப்பிடவும். பேதி செம்மையாகும்.

பத்தியம்:- வாயு பதார்த்தங்களை நீக்கி மற்றவைகளைச் சேர்த்துக் கொள்ளலாம்.

இதனால் நிற்காத பட்சத்தில் சிரசு பளுவாயிருந்தால் சிரசில் வேப்பெண்ணெயைக் காய்ச்சி ஒற்றடம் கொடுக்கவும். ஜலதோஷமா யிருந்தால் - மஞ்சள், சுக்கு, கடுகு, சாம்பிராணி, வேப்பம் பருப்பு

இவைகளை சமமாய் சேர்த்து அரைத்து அதில் கொஞ்சம் அபின் சேர்த்து கொதிக்கவைத்து கபாலம், நெற்றி, மூக்கு முதலிய ஸ்தானங்களில் பற்று போட ஜலதோஷம் குணமாகும்.

கர்ப்பவதிக்குக் காணும் மார்பு வலி, மார்புக்கட்டி.

காரணம்:- பலஹீனமான கர்ப்ப ஸ்திரீகளுக்கும், வாததேகமுடைய கர்ப்பஸ்திரீகளுக்கும் மார்பு நோய் உண்டாகிறதுண்டு.

லக்ஷணம்:- ஸ்தன்னியங்களில் கட்டி உண்டாகி, உடையும் வரையில் அதி உபத்திரவஞ்செய்யும்.

நிவர்த்தி:- போஸ்துகாய் பலம் ½ (அரை) ஒருபடி ஜலத்திலிட்டு காய்ச்சி தினம் 3-4 தடவை வலி, வீக்கமிருக்கும் ஸ்தானத்தில் ஒற்றடங்கொடுக்கவும். இதனால் அனுகூலப்படா விட்டால் ரசப்பிளாஸ்திரியை துணிக்குத் தடவி மார்பின் மேல் போடவும். கட்டிக்கரைந்து போகும். ஆனால் மேற்படி பிளாஸ்திரி ஒருநாள் முழுமையும் எடுக்காமல் போட்டுவைக்க வேண்டும். கரையாமல் சீழ் சேர்ந்திருந்தால் கத்தியினால் கீறி சாஸ்திர சிகிச்சை செய்ய வேண்டும்.

கர்ப்பவதிக்குக் காணும் பாண்டுவியாதி.

காரணம்:- ரத்த குறைவாலும், பகல் நித்திரையாலும், அதிசார பேதி கண்டிருக்குங்காலத்தில் உப்பு புளி அதிகமாய் சேர்த்துக் கொள்ளுவதாலும் உண்டாகின்றது.

லக்ஷணம்:- மர்மஸ்தானத்தில் பக்கமடிப்புகள் வீங்கும். காலையில் எழுந்துபார்த்தால் கால்களின் வீக்கம் வாடியிருக்கும். பகலில் நின்று கொண்டிருந்தால் சாயங்காலம் கால்கள் வீங்கி இருக்கும். மூத்திரம் காய்ச்சிப்பார்க்கவும், வெள்ளை மஷ்டு அடியில் படிந்தால் கர்ப்பஸ்திரீ பிழைப்பது அரிது.

நிவர்த்தி:- பேதி மருந்தைக் கொடுத்து மலச்சிக்கலை நீக்கி அயத்திராவகத்தில் 15 முதல் 30 துளி ஒரு அவுன்ஸ் ஜலத்தில் சேர்த்து தினம் மூன்று தடவை கொடுக்கவும்.

கர்ப்பவதிக்குக் காணும் மகோதரம்.

காரணம்:- வாயு பதார்த்தங்கள் தினஞ்சாப்பிடுவதால் வாயு அதிகரித்து அன்னபானாதிகளை சரியானகாலத்தில் சீரணிக்க செய்யாததினால் உண்டாகும்.

லக்ஷணம்:- கால்கள், சரீரம், வயிறு இவைகளில் வாதநீர் அதிகரித்து வீக்கமிருக்கும்.

பூர்வரூபம்:- அஜீரணம், நீர்கட்டு, தாகம், இவைகளுண்டாகும். 6-வது மாதத்தில் பூர்ணகர்ப்பிணிபோல் தோற்றும், அன்றியும் மேல் மூச்சு, மாரடைப்பு, மூர்ச்சை, தலைவலி, இவைகள் உண்டாகும்.

நிவர்த்தி:- தாயாருக்கு அபாயம் சம்பவிக்குமென்று தோன்றினால் வயிற்றிலுள்ள நீரை ஆயுதத்தால் வெளியாக்கவேண்டும், அல்லது பிண்டத்தை வெளிப்படுத்த உபாயங்கள் செய்யவேண்டும். இந்த வியாதியால் ஸ்திரீக்கு இழுப்பு வந்து பிரசவிக்காமல் இறந்து போவதுமுண்டு. ஆனால் சுகமாய் பிரசவித்தால் மகோதரம் தானாய்க் கரைந்து போகும்.

கர்ப்பவதிக்குக் காணும் மார்பு அதிர்ச்சி.

காரணம்:- கர்ப்ப ஸ்திரீகள் பலஹீனமாயிருந்தால் இந்த வியாதி உண்டாகும்.

லக்ஷணம்:- பலஹீனமான கர்ப்பஸ்திரீக்கு 5-வது மாதத்தில் மார்பு படபடவென்று அடித்துக் கொள்வதுண்டு. காலையில் வாந்தியாகாமல் வாயில் ஜலம் ஊறுகின்ற கர்ப்ப ஸ்திரீகளுக்கு இவ்வியாதி உண்டாகும்.

நிவர்த்தி:- டிங்சர் டிஜிடெலிஸ். (Tincture Digidalis) 15 முதல் 20 துளி ஒரு அவுன்ஸ் ஜலத்தில் சேர்த்து தினம் 2-3-தடவைக் கொடுக்க மார்பு படபட வென்று அடித்துக் கொள்ளுதல் நின்று போம். பரிமள நவக்ஷரா ஜெயநீர் (Aromatic spirit Ammonia) 15 முதல் 20 துளி ஒரு அவுன்ஸ் ஜலத்தில் சேர்த்துக் கொடுக்கலாம். அயசம்பந்தமான மருந்துகளைக் கொடுப்பது வெகு நல்லது. இந்த ஸ்திரீ சுத்தமான காற்றுள்ள இடத்தில் சவுக்கியமாயிருக்க வேண்டியது.

கர்ப்பவதிக்குக் காணும் மேல் மூச்சு.

காரணம்:- சிசு பூர்ணகர்ப்பத்தில் மேல்புறமாக திரும்புவதால் சுவாச குழல்களுக்கு நெருக்கமுண்டாகி சுவாசம் விடுவதற்கு தடைப் படுகின்றது.

லக்ஷணம்:- படுத்துக்கொண்டால் மேல்மூச்சு காணும். இருமல் உண்டாகும்.

நிவர்த்தி:- டிங்சர் கியாம்பர் கம்பௌண்டு (Tincture Camphor compound) 45 துளியை 1 அவுன்ஸ் ஜலத்தில் விட்டு தினம் 2-3-தடவை கொடுக்கவும். மலசுத்தி இல்லாவிட்டால் மலசுத்தியாகும் படி ஆமணக்கெண்ணெயைக் கொடுக்கவும்.

கர்ப்பவதிக்கு பிரசவ நோய்போலுண்டாகும் ஓர் நோய்.

காரணம்:- இந்த நோய் வாயுபதார்த்தங்களைச் சாப்பிடுவதினால் அஜீரணங்கண்டு உண்டாகும்.

லக்ஷணம்:- பிரசவ வேதனைப்போல் விருத்தியடையாமல் நேர்ப்பட இருந்து நின்றுபோம்.

நிவர்த்தி:- இப்பேர்ப்பட்ட நோய் உண்டானால் ஒரு பலம் சிற்றாமணக் கெண்ணெயை சுக்கு கசாயத்தில் சேர்த்துக் கொடுக்கவும். மலசுத்தி 3-4-தடவையாகி வாயு சமனமாகும். அபினி தயிலம் (Liniment Opium) வயிற்றின்மேல் விட்டு தேய்க்க வெகு சகுணங்கொடுக்கும்.

கர்ப்பவதிக்கு மர்மஸ்தானத்தில் உண்டாகும் தினவு.

காரணம்:- சரீரத்தில் அதிக உஷ்ணங்கண்டு இத்தினவு உண்டாகின்றது.

லக்ஷணம்:- மர்மஸ்தானத்தில் சிறு கொப்பளங்கள் உண்டாகி சகிக்கக்கூடாத தினவு காணும்.

நிவர்த்தி:- ரசகர்ப்பூரதூள் விராகனிடை அரை, பிராந்தி அவுன்ஸ் அரை, பன்னீர் அவுன்ஸ் 1½ ஜலம் படி ½ இவைகளை எல்லாஞ்சேர்த்து

அதில் ஒரு சிறு வெள்ளைத் துணியை நனைத்து அதின் மேல் வைக்கவும். இதனால் குணப்படாவிட்டால் கார்பாலிக் ஆசிட் 10 துளியை ஒரு அவுன்ஸ் தேங்காய் எண்ணெயிலிட்டு கலக்கி தடவி வர குணமாகும்.

கர்ப்பவதிக்கு மர்மஸ்தானத்தில் சீழ்போல் திரவம் வருதல்

காரணம்:- சரீரத்தில் அதிக உஷ்ணமுண்டாவதினால் திரவம் பொங்குகின்றது.

லக்ஷணம்:- மர்மஸ்தானத்திலிருந்து சீழ்போல் ஒர்வித திரவம் உண்டாகி வெளிப்படும். அந்த இடம் சிவப்பாயும் எரிச்சலாயும், உஷ்ணமாயுமிருக்கும்.

நிவர்த்தி:- பீச்சாங்குழலால் வெந்நீரை மர்மஸ்தானத்தில் தினம் பலதடவை அடித்தால் உஷ்ணங் குறையும்; பிறகு 2 விராகன். சீனாகாரத்தையாவது அல்லது பால் துத்தத்தையாவது 3 சேர் சுத்தமான ஜலத்தில் கரைத்து ரப்பர் பீச்சாங்குழலால் மர்மஸ்தானத்தில் அடித்து கழுவிவரவும். சுரமிருக்குமாகில் குவைனா 5 கிறேன்ஸ் ஒரு அவுன்ஸ் ஜலத்தில் போட்டு 5 துளி விளாவின கந்தகத்திராவகத்தை விட்டு கரைத்துக் கொடுக்கவும். கொஞ்ச சுரம் நின்ற பிறகு மலச்சிக்கலிருந்தால் லகு விரேசனகாரியைக் கொடுத்து 1-2 தடவை மலசுத்தியாகும்படி செய்யவும்.

கருப்பஸதிரீகளுக்கு 10 மாதங்களுக்குள் சம்பவிக்கும் ரோகங்களில் சில முக்கியமான ரோகங்களின் காரணங்களும், லக்ஷணங்களும், சிகிச்சைகளும் தெளிவாய் கூறினோம். இன்னும் வேறு யாதேனும் ரோகங்கள் உண்டாகில் ரோக நிர்ணய சாரத்தால் இன்ன ரோகமென்று நிச்சயித்து பிராணரக்ஷாமிர்த சிந்துவில் நம்மால் விவரமாய் சொல்லிய அதி அனுபோகமுள்ள ஔஷதங்களைக் கொடுத்து அனுகூலப்படுத்த வேண்டியது.

5-வது அத்தியாயம்.

இது வரையிலும் பிரசோற்பத்தி உண்டாகும் விஷயத்தையும் மாதக்கிரமமாய் பிண்டம் விருத்தி அடைவதையும், பத்து மாதங்களுக்குள் கர்ப்ப வதிகளுக்கு சம்பவிக்கும் வியாதிகளுக்கு ஔஷதங்களையும் சொல்லலாயிற்று. இனி பிரசவ பேதங்களும் பிரசவ லக்ஷணங்களும், சிகிச்சைகளும் சொல்லுவோம்.

சிசு முதலியவைகள் கருப்பையிலிருந்து வெளிப்படுகிறதுதான் பிரசவம். இது 5 வகைப்படும். அகாலப்பிரசவம், சுகப்பிரசவம், கஷ்டப்பிரசவம், அதிகஷ்டப்பிரசவம், அசாத்தியப்பிரசவம் என்பவைகளாம்.

அகாலப் பிரசவம்.

இந்த பிரசவமானது அதி அகாலப்பிரசவம், அகாலப்பிரசவம் என இரண்டு வகைப்படும். அவைகளை அடியில் காண்க.

1-வது அதி அகாலப்பிரசவம் :- இந்தப் பிரசவமாவதற்கு காரணங்கள் கர்ப்பஸ்திரீ பயப்படுதல் உஷ்ணகாரிகளைச் சாப்பிடுதல், பிரசவகாரிகளைச் சாப்பிடுதல், இவைகளினால் பிண்டம் பிரசவமாகும்.

ஸ்திரீ கருத்தரித்து ஐந்து மாதங்களுக்குள் வயிற்றில் நோய் கண்டாலுஞ்சரி, அல்லது ரத்தம்போன்றத்திரவம் யோனியிலிருந்து வடிந்தாலுஞ் சரி, பிண்டம் பிரசவமாகும். இப்பிரசவம் விசேஷமாய் முதல் மூன்று மாதங்களில்தான் உண்டாகும். கருப்பை, பிண்டம், நஞ்சு இம்மூன்றுக்குமுள்ள சம்பந்தங்கள் நாலாவது மாதத்திற்குப்பிறகு அதிகமாகும். வயிற்றில் நோய் அதிகரித்த வுடனே ஒரு கிறேன் அபினியை எடுத்து மாத்திரையாக்கி 2-மணி நேரத்திற்கு ஒரு தடவை தூக்கம் உண்டாகும் வரையில் கொடுக்கவும். தாகம் எடுத்தால் ஜலம் கொடுக்கலாம். பொட்டிலுப்பு 10 கிறேன்ஸ் 2 அவுன்ஸ் ஜலத்தில் கரைத்து 3 மணி நேரத்திற்கு ஒரு தடவை கொடுக்கவும். இம்மருந்தினால் வாந்தியாகில் உடனே மருந்தை நிறுத்தவும். இத்தன்மையான சிகிச்சையால்

யாதொரு பிரயோஜனமும் அடையாமல் ரத்தம் விசேஷமாய்ப் போகுமாகில் பிண்டத்தை வெளிப்படுத்த வேண்டும். ஆதலால் ஏர்க்கட் எக்ஸ்திராக்ட் 25 துளி ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கரைத்துக் கொடுக்கவும். அதினால் அனுகூலப்படாவிட்டால் அபினி 2 கிறேன்ஸும் வங்க உப்பு 20 கிறேன்ஸும் சேர்த்து 2 மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை காலையிலும் மற்றொரு மாத்திரை மாலையிலும் கொடுக்கவும். இந்த மருந்தினால் அனுகூலப்படும். அப்படி அனுகூலப்படாவிட்டால் கருப்பையில் தங்கியிருக்கும் பாக்கி பிண்டத்தை மருத்துவச்சியானவள் தனது கைவிட்டாகிலும் அல்லது ஆயுதத்தினாலாகிலும் வெளியாக்கவேண்டும். இப்பேர்ப்பட்ட ஸ்திரீகள் புருஷசையோகம் செய்யாமல் இருக்க வேண்டியது. அப்படி இருப்பதினால் கருப்பைக்கு பலம் உண்டாகி சௌக்கியமான நிலமையில் நெடுங்காலமிருப்பார்கள்.

2-வது அகாலப்பிரசவம் :- கர்ப்பஸ்திரீ பூர்த்தியாய் 280 நாள்களை அடையாமல் 5-வது மாத முதல் 8-வது மாதத்திற்குள் பிரசவிப்பதுதான் அகாலப்பிரசவம். இந்த பிரசவத்தில் பிரசவவேதனை சொற்பமாயும், பிரசவம் சீக்கிரமாயும் முடியும். பிண்டத்திற்கு உயிர் 5-வது மாதத்தில் உண்டாகிறபடியால் சிசு 7-வது மாதத்தில் பிரசவமானாலும் உயிரோடு இருக்கும். ஆனால் சிசு சிறிதாயும் தானே ஸ்தன்னிய பானஞ்செய்ய திராணியற்றதாயும் இருக்கும். பால் பீரித்து பாலடையால் போடவேண்டியது. அன்றியும் ஒரு தொட்டிலில் மெதுவான சிறு பஞ்சு மெத்தை பரப்பி அதன்மேல் சிசுவைப் படுக்கவைத்து முகம் தவிர தேகமுழுமையும் மெதுவான வஸ்திரத்தால் மூடிவைக்கவேண்டியது.

6-வது அத்தியாயம்

இதுவரையிலும் அகால பிரசவத்தின் பேதங்களும், லக்ஷணங்களும், சிகிச்சைகளும் சொன்னோம். இனி சுகப்பிரசவத்தி ன் பேதங்களும், லக்ஷணங்களும், சிகிச்சைகளும் கூறுவோம்.

சுகப்பிரசவம்.

இந்த பிரசவமானது அதிசுகப்பிரசவம், சுகப்பிரசவம் என இரண்டு வகைப்படும். அவைகளை அடியில் காண்க.

1-வது அதிசுகப்பிரசவம்:- சில பூர்ண கர்ப்ப ஸ்திரீகள் பிரசவிக்கு முன் தெரியவரும் குறிகளில் யாதேனும் அறியாமலே அவர்களுக்கு பிரசவவேதனை கொஞ்சமுண்டாகி 1-2 நிமிஷத்தில் பிரசவிப்பார்கள். இப்பேர்ப்பட்ட ஸ்திரீகள் உட்கார்ந்திருக்கும்போதும் நடக்கும்போதும் பிரசவிப்பதுமுண்டு.

2-வது சுகப்பிரசவம் :- ஸ்திரீகள் கருத்தரித்து 280 நாள்களான பிறகு கர்ப்பத்திலிருந்து சிசுவின் சிரசு வெளியே உதயமாகி 24-மணி நேரத்திற்குள் தாயாருக்கும் சிசுவிற்கும் யாதேனும் அபாயமில்லாமல் பிரசவம் முடிந்து நஞ்சு கிரமமாய் வெளிப்பட்டால்தான் அதுசுகப்பிரசவம். பூர்வரூபம் பிரசவிக்க 15 நாள்களுக்கு முன் கர்ப்ப ஸ்திரீயின் வயிறு தாழ்ந்திருக்கும். சுவாசம் தாராளமாய் வரும். நீர்க்கடுத்திறங்கும். சில சமயங்களில் மூத்திரம் துளித்துளியாய் இறங்கி வஸ்திரம் நனையும். ஆகாரம் செவ்வையாய் சாப்பிடுவாள். சரீரம் லேசாயிருப்பதாகத் தோன்றும். யோனியிலிருந்து வெண்மையான நீர் வடியும். யோனி தடிப்பாகும். பிரசவ வேதனை உண்டாவதற்கு ஒரு நாளுக்கு முன் யோனியிலிருந்து வெண்மையான சிலேஷ்ம நீருடன் ரத்தக்கீற்றுகளும் சேர்ந்த திரவம் வடியும்.

இந்த விஷயங்களினால் பிரசவம் சீக்கிரத்தில் ஆரம்பிக்குமென்று ஸ்திரீகள் தெரிந்துகொள்ள வேண்டியது. பிரசவ ஆரம்பம் என்பது கருப்பை சுருங்க ஆரம்பிப்பதேயாம். இதற்கு பிரசவ வேதனை என்று

பெயர். சில ஸ்திரீகளுக்கு பிரசவ வேதனையைப்போல் இதர சம்பந்தமான நோய் உண்டாகிறது முண்டு. இந்த நோய்க்கு பொய்நோய், மித்தியாநோய், அபத்தநோய், கள்ளநோய் என பலவிதமாகச் சொல்லுவார்கள். இந்த நோய் உண்டானால் சளிபோன்ற திரவம் யோனியிலிருந்து வடியாது. கருப்பாசயத்தின் முகம் விரியாது. பனிக்குடம் ஏற்படாது. எதார்த்தமான பிரசவ வேதனையாயிருந்தால் பிரசவகாலம் சமீபமாக வரவர யோனி வழியாக ரத்தம் வடிதல் அதிகமாகி யோனி முழுமையும் நனைந்து தளர்ந்து அதி அகலமாவதற்கு ஆரம்பிக்கும். பிறகு பிரசவவேதனை ஆரம்பித்து 20-25 நிமிஷத்திற்கு ஒருதடவை நோய் வந்து கொண்டேயிருக்கும். இந்த நோய் ஆரம்பத்தில் கொஞ்சமாயும் பிறகு படிப்படியாய் அதிகமாகும். இது முதலில் முதுகில் கண்டு பிறகு வரவர இடுப்பைச் சுற்றிக்கொண்டு வயிற்றுக்கு வந்து துடைகளுக்குள் இறங்கி விடும். அப்பொழுது அறுப்பது போலும் மெல்லுகிறது போலுமிருக்கும். பிரசவ காலம் சமீபமாக நெருங்க நெருங்க பிரசவ வேதனையும் பிரபலப்படும். கருப்பையின் வாயை விசாலப்படுத்தி பனிக்குடம் பிதுங்கச்செய்யும். அப்போது ஸ்திரீ பலமாய் கத்துவாள். மூச்சுவிடக் கூடாது. பலமாய் முக்குவாள். அப்போது சில ஸ்திரீகள் வாந்தி செய்வார்கள். வாந்தியானால் குணந்தான். இச்சமயத்தில் ஸ்திரீக்கு தைரியக்குறைவும் ஆயாசமும் உண்டாகும். உடனே மறுபடியும் பிரசவவேதனை ஆரம்பிக்கும். இப்போது குழந்தையின் சிரசு அல்லது எந்த பாகம் உதயமாகிறதென்பதை அறிந்துகொள்ளவேண்டும். ஆதலால் ஸ்திரீயை படுக்கையின் மேல் இடது பக்கமாய் படுக்கவைத்து முழங்காலை முடக்கி வயிற்றோடு அணைத்துக்கொள்ளச் செய்து நோய் இருக்கும்பொழுது மருத்துவச்சியானவள் தனது வலது கையின் இரண்டாவது விரலுக்கு விளக்கெண்ணெய்யைத் தடவி யோனிக்குள் பின்பக்கமாய் செலுத்தி உயரத்திலிருக்கின்ற கருப்பையின் வாயைத் தொட்டுப்பார்த்தால் கருப்பையின் வாய் மெதுவாய் விரிகிறஜாடையும், பனிக்குடம் இறங்குகிற விதமும் செவ்வையாய்த் தெரியவரும். இந்த பரிட்சையினால் சிசுவின் இன்ன பாகம் முன்னதாக இருக்கிறதென்பது விரலுக்குத் தென்படும். இந்த பரிட்சைக்கு அங்குல பரிட்சையென்று பெயர். சுகப் பிரசவத்திற்கு தலை முதலில் வரும். விரலுக்கு கெட்டியாய் தட்டுபடும். ஆனால் பனிக்குடம் உடைவதற்கு முன்னே அங்குல பரிட்சை செய்ய வேண்டுமாகில் பனிக்குடத்தில் நகம் பட்டு பனிக்குடம் உடைந்து போகாமல் வெகு ஜாக்கிரதையாய் செய்யவேண்டியது. நகம்பட்டு

பனிக்குடம் உடைந்துபோனால் பிரசவம் சீக்கிரத்தில் முடியாது. சிசுவின் சிரசு யோனியில் வந்திருக்குமாகில் அப்பொழுது பனிக்குடத்தை நகத்தினாலாவது ஊசியினாலாவது கீறி அல்லது குத்தி உடைத்து நீரை வெளியாக்கினால்தான் சிசு சீக்கிரத்தில் பிரசவமாகும். பிரசவிக்க கொஞ்ச நேரஞ் செல்லுமென்று தோன்றினால் ஸ்திரீக்கு பால், காபி அல்லது கஞ்சி கொடுக்கலாம். சகல விஷயங்களும் கிரமமாய் இருக்கிறதாக தோன்றினால் பனிக்குடத்தை உடையும் வரையில் அங்குல பரிட்சை செய்ய வேண்டியது அவசியமில்லை.

இப்பொழுது, நீர்க்குடம் உடைந்து நீர் வெளிக்கு வந்த பிறகு ஸ்திரீயானவள் சுவாசம் செவ்வையாய் விடுவாள். கஷ்டம் ஒழிந்ததுபோல் தோன்றும். நீர்க்குடம் உடைந்த பிறகு பிரசவ ஸ்திரீயை நிர்வாணப்படுத்தி படுக்கவைத்து துப்பட்டியால் போர்த்துவிட வேண்டியது. நோய் சற்று நின்றுயிருந்து உடனே அதிக வேதனை உண்டாகி முக்கல் காணும். சமீபத்தில் இருக்கின்ற எதையாகிலும் பிடித்துக்கொண்டு முக்குவாள். ஸ்திரீயின் முகம் மிகவும் வாடியிருக்கும். நோய் அடிக்கடி சீக்கிரமாய் வந்து அதிக நேரம் நிற்கும். இத் தருணத்தில் அங்குல பரிட்சை செய்தால் சிசுவின் சிரசு விரலுக்கு நன்றாய் தட்டுப்படும். சிசுவின் சிரசு யோனி முகத் துவாரத்தில் வந்திருக்கையில் மலம் ஆசன துவாரமார்க்கமாய் இறங்குவது உண்டு. யோனியின் வெளிமுகத்தில் சிசுவின் சிரசு வருகையில் ஸ்திரீக்கு அதிக வேதனை உண்டாகி பலமாய் முக்கி ஒரு உரத்த சத்தம் போடுவாள். இப்பொழுது சிசுவின் சிரசு உதயமாகும். மருத்துவச்சியானவள், குழந்தை யோனியிலிருந்து வெளிக்கு வருகையில் யோனிக்கும் ஆசனத்திற்கும் மத்தியிலுள்ள இடத்தைத் தனது கையினால் மெதுவாய் அணைத்து ஆதரவாக பிடித்துக் கொள்ள வேண்டியதவசியம். அப்படி பிடிக்காமல் அஜாக்கிரதையாய் இருந்துவிட்டால் அந்த ஸ்தானம் வெடித்து யோனியிலிருந்து ஆசன பரியந்தம் ஒரே துவாரமாகி அதிகஷ்டத்தை விளைவிக்கும். சிசுவின் சிரசு

சிரசு வெளிக்கு வந்த உடனே சிசுவின் கழுத்தில் நாபிக்கொடி சுற்றிக்கொண்டிருக்கிறதா வென்று பார்க்கவேண்டும். அப்படி இருந்தால் அதை மெதுவாய் வெளிக்கு இழுத்து பின்னலை அவிழ்த்து தோள்மேல் தள்ளிவிட வேண்டியது. அன்றியும் தாயின் வயிற்றின் மேல் ஒரு கையை வைத்து கருப்பையை விடாமல் அழுத்திப் பிடித்துக் கொண்டு கீழுக்கு மெதுவாயத் தள்ளிக்கொண்டே போனால் நஞ்சு பிரிந்து சீக்கிரத்தில் சிசு வெளிக்கு வந்துவிடும்.

உதயமான பிறகு சொற்பநேரம் பிரசவவேதனை நின்றிருந்து மறுபடியும் ஆரம்பித்து மற்ற உறுப்புகள் பூர்த்தியாய் வெளிக்கு வந்து விடும். சிசு ஜனித்தவுடனே குளிர்ந்த காற்று அச்சிசுவின்மேல் படும்படி செய்வதால் மூச்சு நிறுத்தி, கை கால்களை உதறிக்கொண்டு செவ்வையாய் அழும். சுவாசம் பூர்த்தியாய் ஏற்படும். நாபிக்கொடியில் நாடி நடை நின்ற வுடனே சிசுவின் தொப்புளுக்கு 2 அங்குலம் விட்டு நாபிக்கொடியை மெல்லிய கயிற்றால் பிகுவாய்க்கட்டி அக்கட்டுக்கு 3 அங்குலம் ஒட்டி வேறொரு கயிற்றால் கட்டி இவ்விரண்டு கட்டுகளுக்கும் மத்தியில் கத்தரியால் சுத்தரித்து சிசுவையும் தாயையும் வேறுபடுத்த வேண்டியது. அப்படி கட்டாமல் நாபிக்கொடியை துண்டித்தால் வெட்டுவாயிலிருந்து ரத்தம் வடிந்து சிசுவுக்கு அபாயம் நேரிடும். சிசு பிரசவமான பிறகு 10-15 நிமிஷத்துக்குள் கருப்பை சுருங்க ஆரம்பித்து கொஞ்சம் நோய் உண்டாகி நஞ்சு வெளிக்கு வந்துவிடும். இத்துடன் பிரசூதவேதனை முடிந்தது.

பிரசவம் முடிந்தபிறகு தாயின் வயிற்றின்மேல் கையை வைத்துப் பார்த்தால் கருப்பை உறுதியாய் மூடிக்கொண்டு பந்துபோல் கைக்குக் காணப்படும். கருப்பை செவ்வையாய் சுருங்காவிட்டால் இரத்தப்பிரவாகம் உண்டாகும். மாயை (நஞ்சு) சீக்கிரத்தில் பேர்ந்து வெளிப்படமாட்டாது. ஆதலால் கருப்பை சுருங்குவது வெகுநல்லது. 10-15 நாள் வரையிலும் நோய் இருந்து கொண்டேயிருக்கும். அப்பொழுது யோனிமார்க்கமாய் உதிரம் சில நாள் சிவப்பாயும், பிறகு சிலநாள் பச்சை மஞ்சள் நிறமாயும், கடைசியாக ஜலமாய்மாறி வடியும். 20-25 நாள்களுக்குள் கருப்பை கரைந்து இடைக்குழியில் பூர்த்தியா யிறங்கி சாதாரண பிரமாணத்திற்கு வந்துவிடும். யோனித்துவாரமும் சுருங்கும்.

பிரசவித்த ஸ்திரீக்கு 10 நாட்களுக்குள் சம்பவிக்கும் அபாயங்களை நிவர்த்தியாக்க உபாயங்கள்.

ஸ்திரீகளுக்கு முதலாவது பிரசவத்தில் பிரசவமானபின்பு நோய் உண்டாகிறது வழக்கமில்லை. ஆனால் 4-5 பிரசவங்களான ஸ்திரீகளுக்கு பிரசவமான பிறகு பலஹீனத்தால் நோய் உண்டாகி நொஞ்சநேரமிருக்கும். சில ஸ்திரீகளுக்கு 2-3 நாள்கள் இருப்பதுமுண்டு. இந்நோய் நிற்க வைத்தியர் அபின் திராவகத்தில் 10 முதல் 15 துளி வீதம் ஜலத்தில் தினம் 2 தடவை கொடுக்கவேண்டும். ஸ்திரீ கஷ்டடைந்து பிரசவித்தால் பிரசவமானபிறகு தூக்கம் வரும் படி செய்ய அபினி திராவகம் (Tincture Opium)

12 முதல் 20 துளி ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கலந்து கொடுக்கவேண்டியது. அன்றியும் பிரசவித்துக் கொஞ்சநேரஞ் சென்ற பிறகு நாடியைப் பரீட்சித்து சுரம் வராமலும் நாடி வேகமாய் அடிக்காமலும் பார்த்துக்கொள்ள வேண்டியது. சுரம் வந்தால் குவைனா 5 கிறேன்ஸ் ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கலந்து காலை மாலை கொடுக்கவேண்டியது. நோய் அதிகமாயிருந்தால் குவைனாவை 3 கிறேன்ஸ் இடையுள்ள மாத்திரைகளாக்கி காலையில் 2 மாத்திரையும் மாலையில் 2 மாத்திரையும் கொடுக்க நோய் நின்றுபோம். பிரசவித்த ஸ்திரீக்கு நீர் இறங்கினதா உதிர பெருக்குண்டாவென்று தெரிந்து கொள்ள வேண்டும். நீர் இறங்காவிட்டால் வெந்நீரில் கம்பளி அல்லது ஸ்பாஞ்சு நனைத்து அடிவயிற்றின்மேல் சுடசுட ஒற்றடம் கொடுக்க வேண்டியது. இந்த உபாயத்தால் நீர் இறங்கினால் ஏர்க்கட்டு எக்ஸ்டிராக்ட் (Ercot extract liquid) 20 துளி வீதம் அரைமணி நேரத்துக்கு ஒரு தடவையாக நாலு தடவை கொடுக்கவேண்டும். இந்த சிகிச்சையினால் நீர் இறங்காவிட்டால் சலாக்கையினால் உடனே நீரை வெளியாக்கவேண்டும். அழுக்குத் திரவம் அதிகமாய்ப் போய்க் கொண்டிருந்தால் அந்த ஸ்திரீயின் அடிவயிற்றின் மேல் பெல்லடோனா தயிலத்தையாவது (Belladona Liniment) அல்லது குளோர்பாரத் தைலத்தையாவது தடவி ஆளிவிரைமாவைக் கிளறி பொட்லிசு செய்து கட்ட வேண்டும். இத்தேசத்தில் இந்து ஸ்திரீ காலை போஜனஞ்செய்த பிறகு பிரசவித்தால் அவளுக்கு மறுநாள் காலையில் ஆகாரம் கொடுப்பதும், இராபோஜனஞ் செய்த பிறகு பிரசவித்தால் மறுநாள் ஆகாரங்கொடுக்காமல் மூன்றாம் நாள் காலையில் ஆகாரங்கொடுப்பது வழக்கம். ஆனால் இந்த ஏற்பாடு அனுசரிப்பதுடன் அந்த ஸ்திரீ எப்பொழுது பசி அதிகமாயிருக்கிறதாக சொல்லுகிறாளோ அப்பொழுது புழுங்க அரிசி நொய்யின் கஞ்சியைக் கொடுக்க வேண்டியது. பிரசவித்த ஸ்திரீ 11 நாள்கள் வெகு பத்தியமாயிருக்க வேண்டியது. மருத்துவவைத்தியர் 11 நாள்கள் அந்த ஸ்திரீக்கு யாதொரு வியாதியும் நேரிடாமலிருக்கும்படி வெகு ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ள வேண்டியது. அந்த ஸ்திரீ தலைபாரம் சுரம் என ஏதாயினும் உண்டென்று சொன்னதக்ஷணமே தகுந்த அவுஷதங்கள் கொடுத்து உடனே அனுகூலப் படுத்தவேண்டும். நாளையதினம் மருந்து கொடுக்கலாமென்று அஜாக்கிரதையாயிருக்கக்கூடாது. ஒரு நாழிகையில் அதிகரித்து அபாயத்திற்கு வந்துவிடும். இராக்காலத்தில் அதிக ஜலம் குடிக்கக்கூடாதென்றும், ஆகாரம் மட்டமாய்ச் சாப்பிடவேண்டு மென்றும்

சீதள வஸ்துக்களைச் சாப்பிடக் கூடாதென்றும் அந்த ஸ்திரீக்கு வைத்தியர் சொல்ல வேண்டியது. மருத்துவச்சி அந்த ஸ்திரீயின் மர்மஸ்தானத்தை கார்பாலிக்லொஷன் (Carbolic Lotion) வெந்நீரில் கொஞ்சங் கலந்து பிரதி தினமும் அம்மர்மஸ்தானத்தைக் கழுவி சுத்தமாய் வைக்கவேண்டியது. மலசுத்தி ஆகவில்லையென்று அந்த ஸ்திரீ சொன்ன உடனே பேதி மாத்திரை கொடுத்து மலசுத்தி ஆகும்படி செய்ய வேண்டியது. அந்த ஸ்திரீக்கு தலைபாரம், சுரம், தேககனதி, ஜலதோஷம், உடம்பு கடுப்பு, பசியில்லாமை இவைகளில் யாதேனு மில்லாமல் தேகம் சவுக்கியமாயிருக்கும் பட்சத்தில் 11-ம் நாள் காலமே ஓமத்தில் பசும்பால் விட்டு அரைத்துச் சுடவைத்து தலையில் தடவி தேய்த்து வெந்நீர் ஸ்நானஞ் செய்து வைக்கலாம்.

பிரசவித்த ஸ்திரீக்கு பால் வறண்டுபோகும் படிச் செய்ய உபாயங்கள்.

சில பிரசவித்த ஸ்திரீகள் குழந்தைக்குப் பால் கொடுக்காமல் தாதியை வைத்தாலும் அல்லது குழந்தை இறந்துபோனாலும் அந்த ஸ்திரீக்கு பால் கட்டிக்கொண்டு சுரம் வரும், மார்பு வீங்கும். இப்பொழுது செவ்வையாய் பேதியாகும்படியாய் 6 முதல் 8 கிராம் ஏப்ஸம் சால்ட்டு (Epsom salt) சுக்கு கசாயத்தில் கரைத்து காலையில் கொடுக்கவும். மறுநாள் 10 முதல் 15 கிறேன்ஸ் அயோடைட் ஆப் பொடாஸியம் (Iodide of Potassium) ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கரைத்து காலையிலும் மாலையிலும் மறுநாள் கா்லையிலும் கொடுக்க பால் வறண்டு போம். பஞ்சை மார்பின்மேல் வைத்துக் கட்டினாலும் சரி, துவரம் பருப்பை அரைத்து பற்றுப் போட்டாலும் சரி, பெல்லடொனா எக்ஸட்ராக்ட்டு தடவினாலும் சரி பால் வறண்டுபோம்.

பிரசவித்த ஸ்திரீக்கு பால் சுரக்கும்படிச் செய்ய உபாயங்கள்.

சிற்றாமணக்கிலையை வதக்கி மார்பில் போட்டு வர பால் சுரக்கும். அன்றியும் சுரைப்பிஞ்சியைச் சமையல் செய்து பால் விட்டுச் சாப்பிட்டுவந்தால் பால் சுரக்கும்.

பிரசவித்த குழந்தையைக் காப்பாற்றும் உபாயங்கள்.

மருத்துவச்சியானவள் குழந்தை பிறந்தவுடனே வெளிக்காற்று அடிக்குமிடத்தில் பாயின் மேல் துணியை மடித்துப் போட்டு அக்குழந்தையை அதின் மேல் படுக்க வைக்கவேண்டியது. வெளிக் காற்று அடிப்பதினால் குழந்தை செவ்வையாய் அழும்; தாராளமாய் சுவாசம் விடும். குழந்தை பிரசவமானவுடனே செவ்வையாய் அழுதால் சோப் (Soap) தேய்த்து வெந்நீரில் கழுவி வெள்ளைத் துணியால் துடைத்து விட வேண்டியது. துடைத்த பிறகு குழந்தையை தாயின் முலைப்பால் குடிக்கும்படி செய்தால் இந்த சீம்பாலால் குழந்தைக்கு ஒரு தடவை செவ்வையாய் மல சுத்தியாகும். ஆகாவிட்டால் ஆமணக்கெண்ணெயும் பாலும் அல்லது வெற்றிலைச்சாறும் கள்ளிச்சாறும் சேர்த்துகொடுக்கலாம். தொப்புட் கொடி விழுந்து போகும் வரையில் வெள்ளை வஸ்திரத்தின் கரியை அதைச் சுற்றி போட்டுக்கட்ட வேண்டியது. இப்போது இக்குழந்தையை தாயின் பக்கத்தில் ஒரு உலர்ந்த துணி அல்லது பிளானல் (Flannel) மடித்துப் போட்டு படுக்க வைத்து முகம் தவிர சர்வாங்கமும் மெல்லிய துணி அல்லது கம்பளியால் (Flannel) போர்த்து வைக்க வேண்டும். தாயின் ஸ்தனங்களில் பால் சுரக்கும் வரையில் இதர ஸ்திரீயின் முலைப்பாலைத் தருவித்து 6 மணி நேரத்திற்கு ஒரு தடவை புகட்ட வேண்டியது. 3-வது நாளில் தாய்க்கு வெள்ளைப்பால் சுரக்கும். இப்போது குழந்தைக்கு தாய்ப்பால் புகட்டலாம். தாய்க்குப் பால் கொஞ்சமாயிருந்து சில நாள்களுக்குள் வறண்டு போனால் நிரோசியாயும், 16 வயதுக்கு மேல் 30 வயதுக்குள்ளாகவும், பலமுள்ளவளாயுமிருக்கின்ற ஒரு தாதியை ஏற்படுத்த வேண்டும். ஒரு மாதமான பிறகு குழந்தைக்கு பகலில் பால்கொடுப்பதுபோல் இரவில் கொடுக்காமல், தாய் படுக்கைக்குப்போகு முன் ஒரு தடவையும், விடியஜாமத்துக்கு ஒரு தடவையும் கொடுக்க வேண்டியது. அப்படிக்கு தாதியைவைக்க திராணியில்லாத ஏழையாயிருந்தால் பசும் பால் 2 பாகமும் ஜலம் 1 பாகமும் சேர்த்துக்காய்ச்சி கொஞ்சம் கற்கண்டு தூள் போட்டால் முலைப்பாலுக்கு சமானமாகும், அல்லது ஆட்டுப்பாலை செவ்வையாய் வடி கட்டினாலும் முலைப்பாலுக்கு சமானமாகும். இவ்விரண்டில் எதையாகிலும் குழந்தைகளுக்கு புகட்டலாம். 2-3 மாதங்களான பிறகு சுயமான பசும்பாலுடன் (ஜலம் சேராமல்) கற்கண்டு தூள் கொஞ்சம் சேர்த்து கொடுக்க வேண்டியது. அன்றியும் ஜவ்வரசி, (Sago) அரோருட்மாவு,

டபாகோ, இவைகளில் எதையாகிலும் ஒன்றை கஞ்சியாக்கி அதில் பசும் பாலிட்டு கொஞ்சம் சீனி போட்டு தினம் ஒரு தடவையும், கார்ன்பளோர் கஞ்சியுடன் பாலும் சீனியும் சேர்த்து மற்றொரு தடவையும் மாறிமாறிக் கொடுத்தால் மலச் சிக்கல் உண்டாகாமல் தேகம் சவுக்கியமாயிருக்கும். ஆனால் எப்பொழுதும் குழந்தைகளுக்கு ஆகாரம் கொஞ்சம் குறைவாகவே போடவேண்டியது. அதிகமாய்க் கொடுத்தால் அஜீரணம் கண்டு பற்பல வியாதிகள் உண்டாகும். ஆகையால் மிதம் இவ்வளவு என்று அறிந்து ஆகாரம் கொடுக்க வேண்டும். குழந்தைக்கு வயது ஒரு வருஷமான பிறகு மாமிசதாரிகளாயிருக்கின்றவர்கள் கொஞ்சமாமிசரசம், கோழிமுட்டை சேர்த்து வரலாம். வயது பத்து ஆகும் வரையில் ஆகாரம் ஜீரணிக்கத் தக்க பதார்த்தங்களாயிருக்க வேண்டும். குழந்தைக்கு கொஞ்சங் காபி அல்லது தேயிலைத் தண்ணீர் கொடுக்கலாம். ஆனால் அதிகமாய் கொடுக்கக் கூடாது, கொடுத்தால் மந்தித்து பலவியாதிகளுக்கு காரணமாகும். ஆதலால் பெற்றோர்கள் குழந்தை கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுக்கக் கூடாது. அப்படி கொடுக்கும் பட்சத்தில் அந்த பதார்த்தங்கள் குழந்தைக்கு ஆரோக்கியத்தை உண்டாக்கும் படியானவைகளா யிருக்கவேண்டும். குழந்தைக்கு பிரதி தினமும் வெந்நீரில் ஸ்நானஞ்செய்து வைக்கவேண்டும். குளிர்ந்த ஜலஸ்நானம் உதவாது. சீதள காற்று தேகத்தில் படாமலிருக்கும்படி பிளானல் போர்ச்சட்டைப்போட்டு வைக்க வேண்டும். போடாவிட்டால் ஜலதோஷம், இருமல் முதலிய சிலேஷ்ம ரோகங்கள் வந்து சம்பவிக்கும். சுத்தமானதும் மெதுவானதுமான படுக்கைகளிருக்க வேண்டும். முறை தவறாமல் குழந்தைக்கு அப்பியங்கன ஸ்நானஞ் செய்து வைக்க வேண்டும். சிறு குழந்தை தூங்கினால் தானே எழுந்திருப்பது நலம். காரணமில்லாமல் எழுப்பக்கூடாது. குழந்தை 5 வயது வரையில் பகலில் தூங்குவது தேகத்திற்கு சவுக்கியம். குழந்தைக்கு வயது ஆக ஆக நித்திரையும் குறையும். பத்து வயதுள்ள குழந்தை இராத்திரி 8 மணி வரையில்தான் படிக்கும்படி செய்யவேண்டும். அதிக நேரம் படிக்கவைத்தால் குழந்தைகள் நசித்து சரீரத்தில் பலங்குறைந்து இளைத்துப்போவார்கள். குழந்தைகள் சவுக்கியத்திலிருக்க ஒன்பது விஷயங்களை அவசியமாய் அனுசரித்து நடக்க வேண்டியது. அதாவது:-

1-வது - சுத்தமான காற்றுள்ள இடத்தில் நடமாடுதல்

2-வது - சுத்தமான ஜலத்தை உபயோகித்தல்.

3-வது - இன்பமானதாயும், ஜீரணிக்க செய்யும்படியானதுமான நல்ல ஆகாரத்தைச் சாப்பிடுதல்.

4-வது பிரதி தினமும் காலையில் ஸ்நானஞ் செய்தல்.

5-வது சுத்தமான வஸ்திரத்தை உடுத்துக் கொள்ளுதல்.

6-வது தேக முயற்சி கூடியவரையில் எடுத்துக்கொள்ளுதல்.

7-வது மனதில் யாதொரு கவலையுமில்லாமல் சந்தோஷமாயிருத்தல்.

8-வது சுத்தமான இடத்தில் வசித்தல்.

9-வது இராத்திரியில் சரியான நித்திரை அடைதல்.

இவ்வொன்பது விஷயங்களையும் அனுசரித்து நடக்க வேண்டுமென்று பெற்றோர்கள் குழந்தைகளுக்கு சொல்வதுமன்றி மேற்படி விஷயங்களைச் சரியாய் நடக்கும்படி செய்யவேண்டியது.

குழந்தைக்கு இளமைப்பருவத்தில் கல்வியையும் நல்லொழுக்கத்தையும் கற்பிக்க வேண்டும். குழந்தையின் ஒவ்வொரு வார்த்தையையும், செய்கைகளையும், நடைகளையும் கவனித்து, அதனிடத்தில் நன்மையைக்காணும்பொழுது பிரியத்தைக்காட்டியும், தீமையைக்காணும்பொழுது தக்க புத்தியை சொல்லியும் நயமும் பயமுமாய் வளர்க்க வேண்டியது.

குழந்தைகளுக்கு 7-வது மாதத்தில் பற்கள் முளைக்க ஆரம்பிக்கும். சரீரவியவஷேதசாஸ்திரத்தில் பற்களைப்பற்றி விவரமாய் சொல்லியிருக்கிறோம். அதைப் படித்து பார்த்தால் ஆனந்தமடைவீர்கள். இந்த பாலர் பற்கள் முளைக்கும்போது சில குழந்தைகளுக்கு சுரம், பேதி உண்டாகிறது வழக்கம். பிராணரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லிய மருந்துகளைக்கொடுத்து வாயுவை கண்டிக்கவும், சுரத்தை சாந்தப்படுத்தவும், குழந்தைகளுக்கு சம்பவிக்கும் சகல ரோகங்களின் லக்ஷணங்களை ரோகநிர்ணயசாரத்தால் அறிந்து கொண்டு பிராணரக்ஷாமிர்தசிந்துவில் பாலர்களின் ரோகங்களுக்கு சொல்லிய ஔஷதங்களைக் கொடுத்து அனுகூலப்படுத்திக் கொள்க.

7-வது அத்தியாயம்

இதுவரையிலும் சுகபிரசவத்தின் பேதங்களும், லக்ஷணங்களும், சிகிச்சைகளும், பிரசவித்த ஸ்திரீகளுக்கும் சிசுவுக்கும் காப்பாற்றும் உபாயங்களும் விரிவாக சொல்லலாயிற்று. இனி கஷ்டப் பிரசவத்தைச் சொல்லுவோம்.

கஷ்டப்பிரசவம்.

கஷ்டப்பிரசவமானது 12 வகைப்படும். அவைகளை அடியில் விபரமாய் காணலாம்.

1-வது கருப்பையின் முகம் மலராமலிருத்தல் :-
கருப்பையின் முகம் மலராமல் பிகுவாயிருப்பதை அங்குல பரீக்ஷையினால் அறிந்து கொண்டு செவ்வைய்யாய் விரியும்படி செய்ய பெல்லடோனா எக்ஸ்ட்ராக்ட் கருப்பையின் முகத்தில் தடவினால் முகம் விரியும். அப்படி விரியா விட்டால் கருப்பையின் முகத்தில் படும்படியாய் வெந்நீரை பீச்சாங் குழலால் அடிக்க தளர்ந்து முகம் விசாலமாகி விடும். கருப்பையின் துவாரம் விசாலமான பிறகு சிசு கிரமமாக பிரசவமாகும்.

2-வது 2-3 அல்லது 4 சிசுக்கள் கருப்பையில் உண்டாயிருத்தல்:-
கருப்பையில் 2-3 அல்லது 4 சிசுக்களிருந்தால், சவ்வு ஒவ்வொரு சிசுவுக்குந் தனித்தனியே உண்டு. இரண்டு சிசுக்களிருந்தால் ஒன்றின் சிரசும், மற்றொன்றின் ஆசனமும் பிரசன்னமாகும். ஒரு சிசு ஜனித்த பிறகு நாபிக் கொடியை கத்தரியால் கத்தரித்து சிசுவை வேறாக்கின பிறகு இரத்தம் வெளிப்படாமலிருக்க மேல் கொடியை கயிற்றால் கட்ட வேண்டியது. அப்படி கட்டாவிட்டால் மற்றொரு சிசுவுக்கு அபாயம் நேரிடும். இப்போது தாயின் வயிற்றின் மேல் கட்டின துணியை பிகுப்படுத்த வேண்டும். கொஞ்ச நேரம் நோய் நின்றிருந்து மறுபடியும் உடனேயாவது அல்லது 1-2 நாள்பொருத்தாவது ஆரம்பிக்கும். முதல் சிசு பிரசவமானபடியால் மர்மஸ்தான மார்க்கம் விரிந்து தாராளமாய் இருக்கும். ஆதலால் இரண்டாவது

சிசு சீக்கிரத்தில் பிரசவமாகும். ஆனால் 2 சிசுகளின் சிரசுகள் கருப்பத் துவாரத்தில் நெருக்கிக் கொண்டு பிரசவிக்க வருத்தப்பட்டால் ஒரு சிசுவின் சிரசை மேல் தூக்கிக்கொண்டு மற்றொரு சிசுவின் சிரசை குறட்டினால் பிடித்து வெளியாக்க வேண்டும். இவ்விரண்டு சிரசுகளில் ஓர் சிரசு அதிபெரிதாயிருந்து குறட்டினால் வெளிப்படுத்த முடியர்விட்டால் சிபலோடிரிப் (Cephalotribe) என்ற ஆயுதத்தினால் அச்சிரசின் எலும்புகளை நலங்கச்செய்து வெளியாக்க வேண்டும். இந்த சாஸ்திர சிகிச்சை அதிக அனுபோகமுள்ள மருத்துவ வைத்திய நிபுணர்களால் நடத்தப்படவேண்டும்.

3-வது இடுப்புவளைவுள்ள ஸ்திரீ பிரசவித்தல் :-

அந்த ஸ்திரீயின் கருப்பை விசாலமில்லாமல் இருப்பதினால் சிசு திரும்பக்கூடாமலும் சிசுவின் சிரசு வெளிப்படுத்தக் கூடாமலும் போவதால் பிரசவமாகிறதில்லை. இத் தருணத்தில் சிசுவைத் துண்டித்து வெளியாக்க வேண்டும். அப்படிச் செய்யாவிடில் சிசு இறந்து போவதுடன் தாயாருக்கும் பிராணஹானி உண்டாகும். இந்த சமயத்தில் நிபுணரான மருத்துவ வைத்தியரை வரவழைத்து சாஸ்திர சிகிச்சை நடத்தப்படவேண்டியது.

4-வது மலக்கட்டு நாபிக்கொடியி லுண்டாகி சிசு பிரசவமாக தடைப்படுதல்:-

இச்சமயத்தில் மலம் இறங்கும்படி பீச்சாங்குழலால் சுத்தி செய்ய சிசு வருத்தப்படாமல் சாதாரணமாய் பிரசவமாகும்.

5-வது பனிக்குடத்தில் அதிக நீர் சேர்ந்திருத்தல் :-

பனிக்குடத்தில் அதிக நீர்சேர்ந்திருப்பதை செவ்வையாய் அறிந்து நிச்சயமான பிறகு பனிக்குடத்தை நகத்தால் உடைத்து நீரை வெளியாக்க வேண்டியது அதிஅவசியம். இப்படி நீரை வெளிப்படுத்தின பிறகு பிரசவம் சாதாரணமாக முடியும்.

6-வது பிருஷ்டம் அதாவது இடுப்பின் பூட்டு எலும்பு வளைவுள்ள ஸ்திரீ பிரசவித்தல்:-

இப்பேர்ப்பட்ட ஸ்திரீயின் பிரசவத்தில் கஷ்டப் பிரசவத்தின் 3-வது நம்பரில் சொல்லிய காரணங்களையும் சிகிச்சைகளையும் அனுசரிக்கவேண்டியது.

7-வது சிசுவின் சிரசில் நீர்க்கொண்டு சிரசு பெரிதாகியிருந்தாலுஞ்சரி. சிசு சுபாவத்திற்கு அதிபெரிதாயிருந்தாலுஞ்சரி, சிசுவுக்கு கருப்பையில் வியாதிகண்டு வயிறு பெரிதாய் வீங்கியிருந்தாலுஞ்சரி, அச்சிசு அல்லது சிசுவின் சிரசு யோனி முகத்தில் கொள்ளாமலிருத்தல் :-

சிசுவின் சிரசு யோனி முகத்தில் கொள்ளாமலிருந்தால் அச்சிரசை குறட்டினால்பிடித்து வெளியாக்க வேண்டியது. அப்படிக்கு வராவிடில் சிரசை க்ஷேதித்து வெளியாக்க வேண்டும். கருப்பையில் சிசுவின் வியாதியால் வயிறுபெரிதாய் வீங்கி பிரசவிக்க வருத்தப்பட்டால் சிசுவின் வயிற்றைக் கீறி நீரை வெளியாக்கினால் சிசு சிறிதாகி யோனி முகத்தில் கொள்ளும். இத்தன்மையான சாஸ்திர சிகிச்சை அதிஅனுபோகமுள்ள மருத்துவ வைத்திய நிபுணர் செய்ய வேண்டியது.

8-வது ஸ்திரீயின் கர்ப்பாசயம் அகலமில்லாமலிருத்தல்:-

இப்பேர்ப்பட்ட ஸ்திரீகள் பிரசவிப்பது கடினம். ஆகையால் கஷ்டப்பிரசவத்தின் 3-வது நம்பரில் சொல்லிய விதிகளை அனுசரிக்கவேண்டியது.

9-வது கருப்பை சாய்ந்திருத்தல்:-

எந்தப்பக்கம் கருப்பை சாய்ந்திருக்கிறதோ அந்தப் பக்கம் மேலாக்கி ஸ்திரீயை படுக்க வைக்க வேண்டியது.

உதாரணம்:- கருப்பை முன்னுக்குச்சாய்ந்திருந்தால் மல்லாக்க படுக்க வைக்க வேண்டியது.

10-வது பிரசவவேதனை அற்பமாய் வருதல் :-

இந்த வேதனை ஸ்திரீயின் பலஹீனத்தால் அற்பமாய் வந்து கொண்டிருந்தால் அபினித்திராவகம் 20 முதல் 30 துளி வரையில் ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கலந்து கொடுக்க சொற்ப நித்திரை வர பலமும் கொஞ்சம் வரும். அப்படி பலம் வருவதால் நோய் கிரமமாக உண்டாகி பிரசவம் முடியும்.

11-வது பிரசவவேதனை பலமாய் வந்தும் கிரமமற்றதாயும் உபயோக மற்றதாயுமிருத்தல்:-

இத்தருணத்தில் ஏர்கட் எக்ஸ்ட்ராக்ட் 25 முதல் 30 துளி ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கலந்து கொடுக்க உடனே கிரமமாய் பிரசவநோய் உண்டாகி பிரசவம் சாதாரணமாய் முடியும்.

ஆனால் கருப்பையின் முகம் மலருவதற்கு முன் இம்மருந்தைக் கொடுக்கக் கூடாது. மருத்துவச்சியானவள் ஸ்திரீயைத் தன் மார்பின் பேரில் அணைத்துக் கொண்டு தனது 2 உள்ளங்கைகளால் வயிற்றின் மேல் ஸ்தானத்தை நோய் வரும்போது அமுக்கினால் பிண்டம் கீழே நழுவி விழுந்துபோம். இவைகளினால் எல்லாம் யாதொரு சாதகமுமில்லாவிட்டால் சிசுவின் சிரசைக் குறட்டினால் பிடித்து வெளிக்குக் கொண்டுவரவேண்டியது. அப்படிச் செய்வதினால் சிசு உயிரோடு வெளிக்குவரும்.

12-வது யோனி முகத்தில் முதலில் முகவாய் கட்டை வருதல்:-

இந்த பிரசவத்தில் அங்குல பரீட்சை செய்தால் முதலில் முகவாய்க் கட்டை விரலுக்குத் தட்டுபடும், பிறகு வாயும் முகமும் அகப்படும். இந்த பிரசவத்தில் நீர்க்கட்டு உண்டாகிறது வழக்கம். ஆதலால் நீரை சலாக்கினால் வெளியாக்க வேண்டும். கருப்பையிலிருந்து சிசுவின் முகவாய்க்கட்டை பிரசவமாகும் போது கடியின் கீல் எலும்புக்கு மத்தியில் சிக்கிக்கொண்டு பிரசவமாவதற்கு வருத்தப்பட்டால் மருத்துவச்சி தனது விரலால் நெருக்கமாகாமல் ஒதுக்கி சிசுவை வெளிப்படுத்தவேண்டியது. மருத்துவச்சி சிசுவின் முகத்தைப் பிடித்து பலமாய் இழுத்தால் சிசுவுக்குப் பாதை உண்டாகிறதுந் தவிர தாயின் யோனியானது ஆசனம் பரியந்தம் கிழிந்துபோய் அதிகஷ்டத்தை விளைவிக்கும். ஆதலால் சிசுவின் முகத்தைப் பிடித்து முரட்டுத்தனமாய் இழுக்கலாகாது.

8-வது அத்தியாயம்.

இதுவரையிலும் 12 வித கஷ்டப்பிரசவங்களை விரிவாகக் கூறினோம். இனி அதிகஷ்டப்பிரசவத்தின் பேதங்களும், லட்சணங்களும், சிகிச்சைகளும் சொல்லுவோம்.

அதிகஷ்டப்பிரசவம்

அதிகஷ்டப் பிரசவமானது 4-வகைப்படும். அவைகளை அடியில் விபரமாய்க காண்க :-

1-வது சிசுவின் முழங்கால் அல்லது பாதங்கள் உதயமாகுதல்:-
பிரசவமாவதற்கு முன் அங்குல பரீட்சை செய்தால் காலின் விரல்கள் அல்லது முழங்கால் விரலுக்கு அகப்படும். பிரசவவேதனை கிரமமாயும் பிரயோஜன முள்ளதாயுமிருந்தால் பிரசவம் சாதாரணமாய் முடியும். அப்படிக்கில்லாமல் அதிக நேரம் வருத்தப்பட்டால் மருத்துவச்சியின் சகாயம் அவசியமாய் வேண்டியது. பிருஷ்டம் முன்னுக்கு வந்தால் அது வெளிக்குக்காணப்படும் வரையில் மருத்துவச்சியின் சகாயம் அவசியமில்லை. ஆனால் நாபிக்கொடி வெளியில் வந்தபோது மருத்துவச்சி அதைக் கொஞ்சம் இழுத்து மத்தியில் கொண்டுவந்து தடைப்படாமல் ஜாக்கிரதையாயிருக்க வேண்டியது. அப்போது நாபிக்கொடியில் நாடி நடை மெதுவாய் அடித்தால் சிசுவின் சிரசை வெளிக்கு வரும்படி உபாயங்கள் செய்ய வேண்டும். சிசுவின் சிரசு கருப்பையின் முகத்தில் உதயமாகும்போது மருத்துவச்சியானவள் தனது இடதுகையின் 2 விரல்களை கருப்பையின் துவாரத்தில் செலுத்தி நாசியின் 2 பக்கங்களையும் ஓர் விரலால் சேர்த்துப் பிடித்துக் கொண்டு சிரசை கீழே அணைத்துக் கொண்டு தனது வலதுகையின் 2 விரல்களை தோளின் மேல் வைத்து இழுத்து சிசுவை வெளியாக்க வேண்டும். அப்படிக்கு சாத்தியப்படாவிட்டால் சிசுவின் சிரசை குறட்டினால் பிடித்து வெளியாக்க வேண்டும்.

2-வது கருப்பையின் முகத்தில் சிசுவின் கை உதயமாகுதல் :

இந்த பிரசவத்தில் சிசு குறுக்காக இருக்கும். முதலில் சிசுவின் வலது அல்லது இடது கை வெளிக்கு வந்திருக்கும். கருப்பை தட்டையாயிருக்கும். சிசுவின் உள்ளங்கை முன்னுக்குத் திரும்பியிருந்தால் முன்புறமாகவும், பின்னுக்குத் திரும்பியிருந்தால் பின்புறமாகவும் சிசு திரும்பியிருக்கும். பெரு விரலால் வலதுகை அல்லது இடதுகை என்று அறிந்துக் கொள்ளலாம். இந்த பிரசவத்தில் சிசு, சில வேளைக்குப் பையில் தானே திரும்பி கையை உள்ளுக்கு இழுத்துக்கொண்டு பாதங்கள் உதயமாகி பிரசவமாகிறதுமுண்டு. அப்படி ஆகாதபட்சத்தில் மருத்துவச்சியானவள் ஸ்திரீயை இடதுபக்கமாய் படுக்கவைத்து தனது வலது கையின் புறத்திற்கு ஆமணக்கெண்ணெயைத் தடவி விரல்களைக் குவித்து ஸ்திரீக்கு நோயில்லாத காலத்தில் யோனிக்குள் காயப்படாமல் விட்டு கருப்பையின் வாயை கொஞ்சங் கொஞ்சமாய் விசாலப்படுத்தி கையை உள்ளுக்கு பிரவேசித்து சிசுவின் மார்பின்பேரிலும் வயிற்றின்பேரிலும் தடவிப் பார்த்து சிசுவின் பாதத்தைக் கண்டறிந்து அதைப் பிடித்து இழுத்து வெளிக்குக் கொண்டுவந்து விட வேண்டியது. கருப்பையில் கையை விட்டுத்தடவி பார்க்கையில் ஸ்திரீக்கு பிரசவவேதனை உண்டானால் அப்பொழுது கையை விரித்து அச்சிசுவின் சரீரத்தின்மேல் அசையாமல் வைத்துக் கொண்டிருக்க வேண்டியது. இரண்டு பாதங்களையும் பிடித்து இழுக்கிறது நல்லதுதான். ஆனால் இரண்டு பாதங்களும் அகப்படுவது கடினம். ஒருபாதம் அகப்பட்டாலும் அதைப் பிடித்து திருப்பலாம். பாதத்தைப் பிடித்து கீழுக்கு இழுக்க இழுக்க கை மேலுக்கு ஏறிப்போகும் சிசுவின் பாதம் வெளிக்கு வந்த பிறகு பிரசவநோய் இருக்கையில்தான் அப்பாதத்தைப் பிடித்து இழுத்து சிசுவை வெளிப்படுத்த வேண்டியது. மருத்துவச்சியானவள் பிரசவவேதனையில்லாமலிருக்கும்போது தான் சிசுவை கர்ப்பத்தில் திருப்பவேண்டியது. சிசுவின் கை கருப்பையிலிருக்கும் பொழுது மருத்துவச்சியானவள் தனது 2 கைகளால் கருப்பையை அணைத்துப்பிடித்து தாங்கிக் கொண்டிருக்கவேண்டியது.

3-வது நாபிக்கொடி இறங்கல்:-

சில சமயங்களில் கர்ப்ப ஸ்திரீ பிரசவிக்கும்போது யோனி முகத்தில் சிசுவின் சிரசை வருவதற்கு முன் நாபிக்கொடி வெளிக்கு வருவது உண்டு. இதற்கு நாபிக்கொடி இறங்கல் என்று பெயர். இக்கொடியின்மேல் சிசுவின் சிரசின் பளு விழுந்து நசுங்கி அக்கொடியில் நாடி நடை தடைப்பட்டு சிசுவுக்கு பிராணஹானி சம்பவிப்பதுண்டு. ஆதலால் மருத்துவ வைத்தியர் முதலில் நாபிக்கொடியில் நாடி நடை உண்டா அல்லது இல்லையா வென்று தெரிந்துக்கொள்ள வேண்டியது. நாடி நடை இருந்தால் சிசு உயிரோடு இருக்கிறதென்று அறிந்துகொண்டு, கருப்பையின் முகம் செவ்வையாய் விரியும் வரையில் பனிக்குடத்தை உடைக்கலாகாது. அப்படி நாபிக்கொடி இடுக்கில் அகப்பட்டுக் கொண்டிருந்தால் பிரசவஸ்திரீயானவள் தனது கைகளை முழங்கால்மேல் வளையும் படி வைக்க வேண்டியது. அப்படிச் செய்வதினால் நாபிக் கொடியானது தனது எதாஸ்தானத்தில் போய் சேர்ந்து விடும். அப்படி சேராவிட்டால் மருத்துவச்சியானவள் தனது கையின் விரலால் அதை எடுத்து கருப்பைக்குள் சிசுவின் கால் அல்லது கையுடன் சேர்த்துவிட வேண்டியது. நாபிக்கொடியில் நாடி நடை இல்லாவிட்டால் சிசு இறந்துபோனதாக அறிந்துகொண்டு இடுக்கில் அகப்பட்டிருக்கிற நாபிக்கொடியை எடுத்து விட வேண்டியது அவசியமில்லை. சிசு கருப்பையில் இறந்துபோனதாக தெரிந்த பிறகு பிரசவம் தற்செயலாய் முடியும்படி விட்டுவிட வேண்டியது. அப்படி பிரசவம் முடிய சாத்தியப் படாவிட்டால் சிசுவின் சிரசை குறட்டினால் பிடித்துக் கொண்டு மெதுவாய் இழுத்து வெளிக்குக் கொண்டு வரவேண்டியது.

4-வது கருப்பையில் சிசு இறந்துபோதல்:-

கருப்பையில் சிசு இறந்துபோன விஷயத்தை அடியில் வரும் குறிகளால் நிச்சயப்படுத்த வேண்டியது. கர்ப்ப ஸ்திரீக்கு கைகால் கருத்தல், மல ஜலக்கட்டு, குளிர் சுரம், நடுக்கல், வாயில் துர்க்கந்தம் வீசுதல், மார்பும் அடிவயிறும் தளருதல், நோய் உண்டானால் நாற்றமுள்ள உதிரம் யோனியிலிருந்து வடிதல், வயிறு சில்லிட்டிருத்தல், வயிறு கெட்டியாய் உப்புதல், பிண்டம்

அசையாதிருத்தல், அதிதாகம், கண்டதின் மேல் சுவாசம் விடுதல், பிரசவ நோய் இல்லாமை, அதிசங்கடம், அடிவயிறு தளருதல் இக்குறிகளால் சிசு இறந்துபோன தென்று தெரியவந்தபிறகு பிரசவம் சாதாரணமாய் நடந்தால் ஆயுத பிரயோகஞ் செய்ய வேண்டியதில்லை. தானாய் பிரசவம் முடியாவிட்டால் சிசுவின் சிரசை குறட்டினால் பிடித்து வெளிக்குக்கொண்டு வரவேண்டியது. அதினாலும் சாத்தியப்படா விட்டால் கிட்டி போன்ற ஆயுதத்தால் (Cephalotribe) சிசுவை வெளியாக்க வேண்டியது. இத்தன்மையான ஆயுத பிரயோகங்கள் நிபுணரான மருத்துவ வைத்தியரால் நடத்தப்பட வேண்டியது.

9-வது அத்தியாயம்

இது வரையிலும் அதிகஷ்டப் பிரசவத்தின் பேதங்களும், லக்ஷணங்களும், சிகிச்சைகளும் சொன்னோம். இனி அசாத்தியப்பிரசவத்தின் பேதங்களும், லக்ஷணங்களும், சிகிச்சைகளுங் கூறுவோம்.

அசாத்தியப் பிரசவம்.

இந்த அசாத்தியப் பிரசவம் 4 வகைப்படும். அவைகளை அடியில் காண்க.

1-வது *நஞ்சு விழாமல் கருப்பையில் நின்று போதல்:- இதற்கு 5 வித காரணங்களுண்டு. (1) கருப்பை சுருங்காமல்போதல். (2) கருப்பையின் கழுத்து சுருங்குதல். (3) கருப்பையின் நடுபாகம் உடுக்கையைப்போல் சுருங்குதல். (4) கருப்பை சமூலமும் சுருங்குதல். (5) வியாதியால் நஞ்சு கருப்பையோடு ஒட்டிக்கொள்ளுதல். இந்த ஐந்துவித காரணங்களினால் நஞ்சு விழாமலிருப்பதைப்பற்றி விரிவாக அடியில் சொல்லுவோம்.

---

* நஞ்சின் உற்பத்தியையும், ஸ்தானத்தையும் உபயோகத்தையும் அடியில் காண்க :- கோழிமுட்டைக்குள்ளிருக்கும் சவ்வுக்கு சமானமாயிருக்கின்ற 2 சவ்வுகளால் கருக்குழியில் ஓர் பை உண்டாக்கப் பட்டு அந்த பையில் ஜலமும் கருவுமிருக்கும். ஆனால் கரு அந்த ஜலத்தில் மிதந்துக் கொண்டிருக்கும். அந்த ஜலத்தினால் கரு வளருகின்றது. துவக்கத்தில் சிசுவின் போஷணைக்கு இது ஆதாரமாகவும், உஷ்ணம் சமரசப் படுத்தவும், சிசுவுக்கு அடி காயம் படாமல் தடுக்கவும் உபயோகப் படுகின்றது. நஞ்சானது மிருதுவான இரத்த நரம்புகளினால் ஏற்பட்டு கருப்பையோடு அணைந்திருக்குஞ்சவ்விலிருந்து உண்டாகி கர்ப்பாசயத்தின் உட்பாகத்தில் அணைந்துக்கொண்டிருக்கின்றது. கருப்பையிலிருக்கின்ற நரம்புகளுக்கு மத்தியில் நஞ்சுக்குள்ளிருக்கின்ற நரம்புகளின் குஞ்சம் பாய்ந்து இரத்தத்தை கிரகிக்கின்றது. ஒவ்வொரு கருப்ப ஸ்திரீக்கும் நஞ்சு அணைந்திருக்கும் ஸ்தானம் வித்தியாசமாயிருக்கும். ஆனால் கர்ப்ப ஸ்திரீயின் இடது பக்கத்தில் நஞ்சு

(1) கருப்பை சுருங்காமல் போவதால் நஞ்சு விழாமலிருத்தல்:-

சிசு பிரசவமான பிறகு அரை முதல் ஒன்றரை மணி நேரம் வரையில் நஞ்சு விழாமல் கருப்பையில் நின்றுபோய் விட்டால் அதை வெளிப்படுத்த உடனே தகுந்த உபாயங்களைத் தேட வேண்டியது. நஞ்சை வெளிப்படுத்தா விட்டால் ரத்தப்பிரவாகம் அதிகமாகி தாய்க்கு அபாயம் சம்பவிக்கும். ஸ்திரீக்கு ரத்தப்பிரவாகம் பிரபலமாய் கண்டு அந்த ஸ்திரீ அதிஆயாசம் அடைந்திருக்கும் பொழுது மருத்துவச்சி கருப்பைக்குள் கையை விட்டு நஞ்சை எடுக்க கொஞ்சமேனும் பிரயத்தனம் செய்யலாகாது. சொற்ப நேரம் நிதானிக்க வேண்டும். ஸ்திரீக்கு ஆயாசம் தீர்ந்த பிறகு ஸ்திரீயின் அடி வயிற்றைத் தேய்த்தாவது அழுத்தியாவது நோயை உண்டாக்க வேண்டும். இந்நோய் இருக்கையில் மருத்துவச்சி கருப்பைக்குள் காயம் படாமல் ஜாக்கிரதையாய் தனது இடது கையால் நாபிக் கொடியைப் பிடித்துக் கொண்டு வலது கையின் விரல்களைக் கூச்சாக குவித்து நாபிக் கொடி மார்க்கமாய் யோனிக்குள் நுழைத்து கருப்பைக்குள் கொண்டு போய் தடவி நஞ்சை அணைந்திருக்கும் ஸ்தானத்தை தெரிந்துக்கொண்டு அதைப்பிடித்து கூடியமட்டும் *சேஷம் நிற்காமல் விரல்களால் பேர்த்து வெளிக்குக் கொண்டுவர வேண்டியது.

ஒட்டிக்கொண்டிருப்பது வழக்கம். நஞ்சு ஒட்டிக்கொண்டிருக்கும் வாஸ்வ ஸ்தானத்தை ஸ்டேதாஸ்கோப் (Stathoscope) என்னும் கருவியால் அறியலாம். நஞ்சின் நடுவிலாவது அல்லது ஓரத்திலாவது நஞ்சுக்கொடி (நாபிக்கொடி) ஒட்டிக் கொண்டிருக்கும். ஆனால் நஞ்சின் மத்தியில்தான் நஞ்சுக்கொடி ஒட்டிக் கொண்டிருப்பது வழக்கம். இந்நஞ்சுக்கொடி குழந்தையின் நஞ்சிற்கும் நாபிக்கும் சம்பந்தப்பட்டிருக்கும். இக்கொடி 12 அங்குலம் முதல் 18 அங்குலம் நீளமுள்ளது. சிலருக்கு இன்னும் அதிக நீளமாயிருப்பது முண்டு.

*வயிற்றில் நஞ்சின் சேஷம் நின்று போனால் அது அழுகிப்போய் அதன் சாரம் தேகத்தில் ஊறி ரத்தங்கெட்டுப் போம். அதனால் கட்டிகள், சுரம், முதலிய அநேக ரோகங்கள் உண்டாகும். இப்படி நஞ்சின் சேஷம் நின்றுபோனால் காண்டிஸ் லோஷன் (Condys lotion)யை யோனியில் பீச்சாங்குழலால் அடிக்கடி அடித்து சுத்தி செய்ய வேண்டும். அளிவிரை மாவின் போல்டிஸ் அடிவயிற்றின் மேல் அடிக்கடி போட்டுக்கட்ட வேண்டும்.

இந்த உபாயத்தால் நஞ்சு வெளிக்கு வந்தவுடனே ரத்தப்பிரவாகம் நின்றுபோம். ½ மணிநேரம் வரையில் அடிவயிற்றை அழுத்த வேண்டியது, பிறகு வயிற்றை ஓர் நீளமான வஸ்திரத்தால் செவ்வையாய் இழுத்துக் கட்ட வேண்டியது. அப்படி ரத்தப் பிரவாகம் நிற்காவிட்டால் ஏர்கட்டு எக்ஸ்டிராக்ட்டு 30 துளி ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கரைத்துக் கொடுக்க வேண்டியது. இதனால் கருப்பை சுருங்கி ரத்தப் பெருக்கு முற்றிலும் நின்றுபோம்.

(2) கருப்பையின் கழுத்து சுருங்குவதால் நஞ்சு விழாமலிருத்தல்:-
மருத்துவச்சி தொப்புட் கொடியைக் கொஞ்சம் பிகுவாய் இழுத்துப் பிடித்துக் கொண்டு கருப்பாசயத்தின் மேல் கையைவைத்து கூபகத்துக்குழியில் அழுத்திக் கொண்டிருந்தால் மாயை (நஞ்சு) விழுந்துபோம். அப்படி விழாமல் உள்ளேயே தங்கிப்போய் விட்டால் முதலாவது நம்பரில் சொல்லிய விதிகளை அனுசரித்து மருத்துவச்சி தனது கையை கருப்பைக்குள் விட்டு நஞ்சை வெளியாக்க வேண்டியது.

(3) கருப்பையின் நடுபாகம் சுருங்குவதால் நஞ்சு விழாமலிருத்தல்:-
நஞ்சு தானாய் விழுகிறதாவென்று கொஞ்சநேரம் பார்த்து பிறகு மருத்துவச்சியானவள் முதலாவது நம்பரில் சொல்லிய விதிகளை அனுசரித்து கருப்பைக்குள் தனது கையைவிட்டு நஞ்சை வெளியாக்க வேண்டியது.

(4) கருப்பை சமூலம் சுருங்குவதால் நஞ்சு விழாமலிருத்தல்:-
தானாய் நஞ்சு விழுகிறதாவென்று கொஞ்சநேரம் எதிர்பார்க்க வேண்டும். அப்படி விழாவிட்டால் மருத்துவச்சி முதலாவது நம்பரில் சொல்லிய விதிகளை அனுசரித்து தனது கையை கருப்பைக்குள்விட்டு நஞ்சைப் பிடித்துக்கொண்டு வெளிப்படுத்த வேண்டியது.

(5) வியாதியால் நஞ்சு கருப்பையோடு ஒட்டிக் கொள்ளுவதால் நஞ்சு விழாமலிருத்தல் :-
மருத்துவச்சி முதலாவது நம்பரில் சொல்லிய விதிகளை அனுசரித்து உடனே தனது கையை கருப்பைக்குள் விட்டு

ஒட்டிக்கொண்டிருக்கும் நஞ்சை வலித்து வெளியாக்க வேண்டியது.

2-வது பிரசவிக்கும்முன் உண்டாகும் உதிர பெருக்கு:-

அநேக கர்ப்பஸ்திரீகள் இரத்தப் பிரவாகத்தினால் இறந்து போவார்கள். இந்த இரத்தப் பிரவாகத்திற்கு சிகிச்சை செய்யும் வைத்தியர் சாமார்த்திய முள்ளவராயும், ஜாக்கிரதையுள்ளவராயுமிருக்க வேண்டும். இரத்தப் பிரவாகத்திலிருந்து தப்பி பிழைக்கிற ஸ்திரீகளின் தேகத்தில் கொஞ்சமாகிலும் இரத்தமிராது. வியாதிகள் அடிக்கடி வந்து வருத்தப்படுத்தும். சிசு பிரசவமாகுமுன் பிரசவகாலத்தில் நஞ்சு கருப்பையிலிருந்து சொற்ப பாகம் வேறுபடுதலினாலும், கருப்பையின் முகத்தில் நஞ்சு இருப்பதினாலும் உதிரப்பிரவாகம் உண்டாகும். இவ்விரண்டு விஷயங்களினா லுண்டாகும் இரத்தப் பிரவாகங்களை அடியில் விரிவாக சொல்லுவோம்.

(1) நஞ்சு கருப்பையிலிருந்து சொற்பபாகம் வேறுப் படுதலினாலுண்டாகும் உதிர பெருக்கு.

காரணம்:- கர்ப்பஸ்திரீ முக்குதல், வண்டியில் ஏறி மேடுப்பள்ள முள்ள ரஸ்தாவில் போதல், உலக்கையால் குத்துதல், பளுவான சுமையை சுமத்தல், முதலிய அநேக காரணங்களினால் கருப்பையில் ஒட்டிக் கொண்டிருக்கிற நஞ்சானது வேறுபடும். அப்படி வேறுபடுவதினால் உதிரப் பெருக்கு உண்டாகும். இந்த உதிரப்பிரவாகம் பிரபலமாயிருந்தால் ஸ்திரீக்கு மாரடைப்பு, இழுப்பு, மூர்ச்சை இவைகள் உண்டாகி அவள் மரணம் அடைவாள். சில சமயங்களில் உதிரப் பெருக்கு உள்ளேயே உண்டாகி கட்டிகள் கட்டி சிசு மரணமடைவது மல்லாமல் தாயாருக்கும் ஜீவஹானி உண்டாகும். இத்தருணத்தில் அதி அனுபோகமுள்ள மருத்துவ வைத்தியரைக் கொண்டு சிகிச்சை செய்ய வேண்டியது. அன்றியும் இந்த ஸ்திரீயை ஒரு மெதுவான படுக்கையின் மேல் மல்லாத்தி படுக்கச் சொல்லி ஒரு தலைகாணி பிருஷ்டபாகத்தின் கீழ் வைத்து ஒரு மெதுவான வஸ்திரத்தைப் போர்த்து விடவேண்டியது.

கஞ்சி அல்லது பால் கொடுக்கலாம். இடுப்பு, அடிவயிறு இவைகளின் மேல் ஒரு சிறு துணியை உப்பு ஜலத்தில் நனைத்து போடவும். இவ்வுபாயங்களினால் குணப்படா விட்டால் பனிக் குடத்தை உடைக்க வேண்டும். கையால் அடிவயிற்றை அழுத்தவேண்டியது. ஏர்கட்டு எக்ஸ்திராக்ட் 20 துளி ஒரு அவுன்ஸ் ஜலத்தில் விட்டு கொடுக்கவும். இவைகளினாலெல்லாம் யாதொரு அனுகூலத்தையும் அடையா விட்டால், (இப்பொழுது குளிர் வந்து பலஹீனமாயிருந்தால் அவளுடைய தேகம் சீதளமாயிருக்கிறதா, அல்லது உஷ்ணமாயிருக்கிறதா வென்றுப் பார்க்க வேண்டும். உஷ்ணமாயிருந்தால் யாதொரு மருந்தும் தேவையில்லை. சீதளமாயிருந்தால் ஒன்றரை அவுன்ஸ் ஜலத்தில் அரை அவுன்ஸ் பிராந்தியும், 10 முதல் 15 துளி பரிமள நவக்ஷாரத் திராவகமும் கலந்து கொடுக்க தேகத்தில் சூடு உண்டாகும். அன்றியும் கர்பூரத் தைலத்தை கை கால்களுக்குத் தடவி தேய்த்தால் சூடு உண்டாகும். அப்படி சூடு உண்டாகும் வரையில் பொறுத்துக் கொண்டு பிறகு) தாமதிக்காமல் உடனே அதி அனுபோகமுள்ள மருத்துவ வைத்தியர் அல்லது மருத்துவச்சி தனது வலது கையின் புறத்திற்கு எண்ணெயிட்டு விரல்களைக் குவித்து மெதுவாய் காயப்படாமல் யோனிக்குள் விட்டு கருப்பையின் வாயை மெல்ல நீக்கி நீக்கி கருப்பைக்குள் கையைப் பிரவேசித்து குழந்தையை திருப்பி பாதங்களைப் பிடித்து வெளிப்படுத்தவேண்டியது. அப்படிக்கு சரிப்படா விட்டால் சிசுவின் சிரசை குறட்டினால் பிடித்து வெளியாக்க வேண்டும். சாதாரணமான மருத்துவச்சியால் இந்த சிகிச்சை நடத்தப்படக் கூடாது.

(2) கருப்பையின் முகத்துவாரத்தில் நஞ்சு ஒட்டிக்கொண்டிருப் பதினால் உண்டாகும் உதிரப் பெருக்கு:-

சில கர்ப்ப ஸ்திரீகளுக்கு 8-வது மாதத்தின் மத்தியில் அல்லது கடைசியில் யாதொரு முகாந்திரமன்றி உதிரப்பிரவாகம் உண்டாகும். கருப்பையின் வாயண்டை தடித்து இருக்கும்.

அங்குல பரீட்சையைச் செய்தால் அது விரலுக்கு அகப்படும். உதிரப்பெருக்கு கொஞ்சம் நின்று இருந்து மறுபடியும் ஆரம்பிக்கும். நோய் ஆரம்பிக்கும் போதெல்லாம் உதிரம் விசேஷமாய் வடியும். இதனால் ஸ்திரீக்கு மூர்ச்சை உண்டாகும். நிவர்த்திக்கக்கூடாத இவ்வித உதிரப்பிரவாகத்தில் ஸ்திரீகள் பிழைப்பது கடினம். அத்தன்மையான ஸ்திரீயை மெதுவான படுக்கையின் மேல் படுக்க வைத்து படிக்கார ஜலத்தை யோனியில் ரப்பர் பீச்சாங்குழலால் அடிக்க வேண்டியது. கருப்பையின் முகம் விரியுமுன் பனிக்குடத்தை உடைக்கலாகாது. கருப்பையின் முகம் விரியவேண்டுமானால் ஸ்பஞ்சி (Sponge) யோனி முகத்தில் வைத்து அடைத்தால் கருப்பையின் முகம் விரிவதுமன்றி உதிரம் வடிதல் நிற்கும். இதனால் கருப்பையின் முகம் விரியா விட்டால் பார்ன்ஸ்பியாக் (Barne's Bag) என்னும் ரப்பரால் செய்யப்பட்ட துருத்தியை கருப்பையின் வாயில் வைத்து ஊதினால் கருப்பையின் முகம் விரிந்து விசாலமாகி சிசு பிரசவமாவதற்கு சுலபமாயிருப்பதுமன்றி இரத்தம் வடிதல் நிற்கும். இப்போது ஸ்திரீயின் அடி வயிற்றை வஸ்திரத்தால் பிகுவாய்க் கட்டி அடி வயிற்றைக் கையால் அமுத்திக் கொடுக்க வேண்டியது. இப்பொழுது 20 துளி ஏர்கட்டு எக்ஸ்திராக்ட் ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கலந்துக் கொடுக்கவும். கருப்பையின் முகம் செவ்வையாய் விரிந்த பிறகுதான் மருத்துவச்சி தனது வலதுகைக்கு எண்ணெயைத் தடவி விரல்களை குவித்து கருப்பைக்குள் விடவேண்டும். அப்படி விடும்போது நஞ்சு நடுவே வந்து தடுத்தால் அதைப் பக்கத்தில் ஒதுக்கிவிட்டு கருப்பைக்குள் கையைக் கொண்டு போய் சிசுவைத்திருப்பி பாதங்களைப் பிடித்து துவாரத்திற்கு வெளியில் பாதங்களைக் கொண்டுவந்து விட்டால் பாதங்களின் பிகுவு நஞ்சின் மேல் விழுவதினால் ரத்தம் வடிதல் நிற்பதுமல்லாமல் சிசுவும் தானாய் பிரசவமாகும்.

3-வது சிசு பிறந்த பிறகு உண்டாகும் உதிரப் பிரவாகம்:- இந்த உதிரப் பிரவாகம் ஏழுவகை காரணங்களாலுண்டாகும்.

(1) கருப்பை பலஹீனமாயிருப்பதினாலுண்டான உதிரப்பிரவாகம்.
(2) பிரசவநோய் நீடித்திருப்பதினாலுண்டான உதிரப்பிரவாகம்.

(3) கர்ப்பஸ்திரீ பலஹீன மாயிருப்பதினாலுண்டான உதிரப் பிரவாகம்.
(4) கருப்பை சுருங்காமல் போவதினாலுண்டான உதிரப்பிரவாகம்.
(5) இரட்டைப் பிள்ளைகள் பிரசவிப்பதினாலுண்டான உதிரப் பிரவாகம்.
(6) கருப்பை மத்தியில் உடுக்கையைப் போல் சுருங்குவதினாலுண்டான உதிரப்பிரவாகம்.
(7) நஞ்சு கருப்பையோடு ஒட்டிக் கொண்டிருப்பதினாலுண்டான உதிரப்பிரவாகம்.

இவ்வேழுவகை காரணங்களினாலும் சிசு ஜனனமானவுடனே யாவது, நஞ்சு விழுவதற்கு முன்னாவது உதிரப்பெருக்கு உண்டாகும். சிசு ஜனனமான உடனே மருத்துவச்சி ஸ்திரீயின் வயிற்றின்மேல் கையால் 30 நிமிஷம் வரையில் அழுத்திக்கொண்டிருந்தால் உதிரப்பெருக்கு உண்டாகாது. நஞ்சு விழுந்தவுடனே ஏர்கட் எக்ஸ்ட்ராக்ட் 30 துளி ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கலந்து கொடுக்கவும். இம்மருந்தால் கருப்பை சுருங்கும். ரத்தம் நிற்கும். பிரசவமாகி 30 நிமிஷமான பிறகு வஸ்திரத்தால் வயிற்றையும் இடுப்பையும் இழுத்துக்கட்ட வேண்டியது. இவ்வித உதிரப்பிரவாகத்தால் ஸ்திரீகளுக்கு அனந்த ஆயாசம் உண்டாகுவதால் மருத்துவச்சி அல்லது மருத்துவ வைத்தியர் சிசு ஜனனமான பிறகு நஞ்சு விழும் வரையில் அதிக ஜாக்கிரதையாய் ஸ்திரீயின் பக்கத்திலிருக்க வேண்டியது. இந்த உதிரப்பிரவாகத்தால் ஸ்திரீயின் வஸ்திரங்கள் உதிரத்தால் நனைந்துபோகும். இவ்வித ரத்தப்பிரவாகத்தை நிறுத்த அதிக அனுபோகமுள்ள மருத்துவ வைத்தியரால் சிகிச்சை நடத்தப்பட வேண்டியது. இப்பேர்ப்பட்ட உதிரப்பிரவாகம் சிகிச்சைக்கு அடங்கா விட்டால் ஸ்திரீ பிழைக்கமாட்டாளென்பது நிச்சயம். அன்றியும் இப்பேர்ப்பட்ட ஸ்திரீக்கு மேல்மூச்சு, மூர்ச்சை, ஆராட்டம், சீதளம், வியர்வை, இழுப்பு, இவைகளைக் கண்டால் பிழைப்பது அரிது.

4-வது கருப்பை உடைந்துபோதல்:-

ஸ்திரீகள் அநேக தடவை பிரசவிப்பதினாலும் பூர்ண கர்ப்பஸ்திரீயினடி வயிற்றின் மேல் அடிபடுவதினாலும், அதிக பெரிய சிசு பிரசவிப்பதினாலும் கருப்பை கிழிந்து போவது உண்டு. கருப்பை கிழிந்து போய்விட்டால் ஸ்திரீ

பிழைப்பது அரிது. ஆனால் பெரும்பாலும் கருப்பை கிழிந்து போகாது. கிழிந்துபோகிறது அபூர்வம். அப்படி கிழிந்துபோகுமாகில் உடனே ஸ்திரீக்கு பிரசவநோய் மேல் வயிற்றில் அதிவிசேஷமாய் உண்டாகி யோனி மார்க்கமாய் அதிக ரத்தம் ஓடும். தேகம் சில்லிட்டுப்போம், நாடி மெதுவாய் நடக்கும். மேல் மூச்சு, வாந்தி, வியர்வை, மூர்ச்சை இவைகள் உண்டாகும். சிசு மேல் வயிற்றில் ஏறியிருக்கும். அதை அங்குல பரிட்சையால் அறியலாம். கருப்பாசயத்தில் சிசுவின் சொற்ப பாகமாகிலும் இருக்குமாகில் தகுந்த உபாயங்கள் செய்து சிசுவை வெளிப்படுத்த வேண்டும். சிசுவை வெளிப்படுத்தின உடனே நஞ்சையும் வெளியாக்க வேண்டும். சிசுவின் சொற்ப பாகமாகிலும் கருப்பையிலில்லாமல் சிசு மேல் வயிற்றில் ஏறிபோயிருந்தால் ஸ்திரீயின் வயிற்றைக்கீறி சிசுவை வெளியாக்கவேண்டியது. இத்தன்மையான சாஸ்திர சிகிச்சையை அதி அனுபோகமுள்ள மருத்துவ வைத்திய நிபுணர்கள் செய்யவேண்டியது.

ஐந்துவித பிரசவங்களின் பேதங்களும், லக்ஷணங்களும், சிகிச்சைகளும் விவரமாய்ச் சொன்னோம். மருத்துவச்சி அல்லது மருத்துவ வைத்தியர் அவைகளை அறிந்துகொண்டு சிகிச்சை செய்வார்களாகில் ஸ்திரீயும், சிசுவும் சுகத்தை அடைவதுந் தவிர மருத்துவச்சி அல்லது மருத்துவ வைத்தியரின் சிகிச்சைகளைக் குறித்து சர்வ ஜனங்களும் விசேஷமாய் புகழ்வார்கள்.

ஸ்திரீஜென்ம சார்த்தகம்
என்னும்
மருத்துவ சாஸ்திரம்
முற்றிற்று.

அனுபந்தம்.

அநேக வைத்தியர்களுடைய அதி அனுபோகமுள்ள கைமுறைகள் நம்மிடமிருப்பதால் அவைகளை சர்வத்திராளுக்கும் உபயோகமாகும் பொருட்டு இவ்விடங்கூறுவோம்.

கலிங்காதி எண்ணெய்:- கும்மட்டிக்காய்ச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, மலைவேப்பிலைச்சாறு, ஆமணக்கெண்ணெய் வகைக்குப்படி 1 சேர்த்துக்காய்ச்சிப் பதத்தில் வடித்து பருவமாதர்கட்கு மாதாந்த ருதுகாலமாகிய 3 நாள்களிலும் காலையில் மாத்திரம் 2 பலம் எண்ணெயை அரை சேர் நீராகாரத்தில் கலந்து கொடுக்க செவ்வையாய் பேதியாகி வந்தியாரோகம் என்கிற மலடுரோகமும், மாதாந்த ருதுகால ரத்தத்தை வெளிப்படுத்தாத ரத்தகுன்மங்களும், நிலைபெற்றிருக்கும் மலட்டுப்புழுக்களும் நீங்கும். உப்பில்லாப்பத்தியமாம்.

-ச. கோபாலசாமி பிள்ளை வைத்தியர் முறை.

கர்ப்பரோக நரச கிருதம்:- பிரமிதண்டு, சீந்திக்கொடி, ஆடாதோடை, சீவனார் வேம்பு இவைகளின்சாறு வகைக்குப்படி 1, பசும்நெய் படி 1, மரமஞ்சள் பொடி பலம் 1, இவைகளை ஒன்றாகக்கலக்கிக் காய்ச்சி வடித்து அரை பலம் வீதம் காலை மாலை வீட்டுக்கு தூரமான 3 நாளும் கொடுக்க சகல கர்ப்பரோகங்கள் குணமாகும்.

-வா. சாமிசெட்டியார் வைத்தியர் முறை.

பாலாமடக்குத் தைலம்:- 50 பலம் சிற்றாமுட்டிவேரை நன்றாய் இடித்து 2 மரக்கால் ஆற்று ஜலமிட்டு காய்ச்சி ஒருபடி கசாயமாக வடித்து, அதில் நல்லெண்ணெய் படி ஒன்று சேர்த்து, ஒருபடி பசும்பாலைக் கொண்டு வந்து 5 பலம் சிற்றாமுட்டி வேரை மேற்படி பாலாலரைத்து மேற்படி கசாயத்தில் கரைத்து பாக்கி பாலையும் சேர்த்து செவ்வையாய் கலக்கி சிறிய தீயினால் எரித்து பதத்தில் வடித்து வைத்துக்கொண்டு தினம் காலை மாலை 2-3 விராகனிடை உள்ளுக்குச் சாப்பிட்டு வாரத்திற்கு 2 தடவை அப்பியங்கனஞ்செய்து வர கருப்பையைப்பற்றிய வாயு, மாதாந்த ருதுகாலவலி, சர்ப்பாசயவாதம், உட்சுரம், கைகால் எரிவு, துற்பலம், முன் நீர்க்கோவை, பின் நீர்க்கோவை முதலிய பலவிதரோகங்களும் குணமாகும்.

-சுப்பாராஜா வைத்தியர் முறை.

மகா கலிங்காதி எண்ணெய்- பேய்க் கும்மட்டிக்காய், திருகுக்கள்ளி, ஆடாதோடை இலை, அவுரி இலை, விழிதி இலை, பொற்றலைக் கரிப்பான், கழற்சி இலை, முடக்கொத்தான், வேப்பம்பட்டை இவ்வொன்பதின் சாறு வகைக்குப்படி 1, சிற்றாமணக்கெண்ணெய் படி 1, வெள்ளாட்டு நீர், சதுரக்கள்ளிச்சாறு, எருக்கிலைபழுப்புச்சாறு வகைக்குப்படி ½ (அரை) இவைகளைச்சேர்த்து அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், வெண்காரம், கல்லுப்பு, கப்பி உப்பு, அட்டுப்பு, வளையலுப்பு, இந்துப்பு, நவக்ஷாரம், எவக்ஷாரம், சத்திச்சாரம், வாய் விளங்கம், கடுகு, கடுகுரோகணி, ஆணைதிப்பிலி, திப்பிலி மூலம், மரமஞ்சள், கருஞ்சீரகம், வகைக்குப் பலம் 1, மேற்படி சாற்றால் அரைத்துப்போட்டு, காய்ச்சி வடித்து, 48 நாள் *தானியபுடம் வைத்து விராகனிடை 5 வீதம் வீட்டுக்கு தூரமான மூன்றுநாள் காலையில்மட்டும் கொடுத்து, 5-வது நாள் ஸ்நானஞ்செய்து வைக்க கர்ப்பசூலை, கர்ப்பவாயு, விப்புசதி முதலிய சகல கர்ப்பரோகங்கள் தீரும். உப்பில்லா பத்தியம்.

-ப. குருசாமி நாயுடு வைத்தியர் முறை.

கட்டுவாதி சூர்ணம்:- மாதுளம் பழத்தோடு, சுண்டைவற்றல், மாம்பருப்பு, கருவேப்பிலை, ஓமம், நெல்லிவற்றல், வெந்தியம் வகைக்கு விராகனிடை 5, வெதுப்பு சூர்ணித்து 1-2 விராகனிடை வீதம் தயிரில் கொள்ள சீதம் இரத்தம் விழுதல், மூலக்கடுப்பு, வயிற்றுக்கடுப்பு, கிரகணி, அதிசாரம், வயிற்றிரைச்சல், கழிச்சல் தீரும்.

-சோமசுந்தரம்பிள்ளை வைத்தியர் முறை.

பூவந்திப்பட்டை எண்ணெய்:- பூவந்திப்பட்டை பலம் 100, இடித்து 16 படி ஜலத்திலிட்டு காய்ச்சி 2 படியாக்கி வடித்து பசும்நெய் படி 1 சேர்த்து, அதில் கடுக்காய்த் தோல் விராகனிடை 20, கஸ்தூரிமஞ்சள் விராகனிடை 20, வன்னிமரத்து வேர்பட்டை விராகனிடை 10, இவைகளை மேற்படி கசாயத்தால் அரைத்து போட்டு காய்ச்சி வடித்து. அத்துடன் கருஞ்சீரகம் விரா 10, சூரணித்துப் போட்டு கலந்து 2-4 விராகனிடை வீதம் தினம் 2 தடவை சாப்பிட்டு வர காசம், சுவாசகாசம், க்ஷயம் முதலிய சகலசிலேஷ்மரோகங்கள் குணமாகும். புளியைத்தள்ளி இச்சாபத்தியமாயிருக்கவும்.

-மா. கோபாலசாமிபிள்ளை வைத்தியர் முறை.

---

*தானியபுடம் என்பது நெல்லிற்குள்வைத்தெடுப்பதேயாம்.

மயனத்தைலம்:- மஞ்சள்மெழுகு, சக்கிக்கல், வெள்ளையுப்பு வகைக்கு பலம் 20, ஆற்றுமணல் பலம் 10, ஓமம், கப்புமஞ்சள், வகைக்கு பலம் 2½ சடாமாஞ்சில் பலம் 1¼ இவைகளை கழுத்து நீண்ட குடத்திற்குள் முறைப்படி அதாவது மஞ்சள்மெழுகு முதலில் போட்டு அதின்மேல் சிக்கிக்கல் அதின்மேல் வெள்ளையுப்பு இவ்விதமாக எல்லா சரக்குகளையும் அடைத்து, மற்றொரு சிறு கலசத்தை அதன் வாய்க்குப் பொருந்தக் கவிழ்த்து மூடி, அந்த சந்தின்வாய் மறை மண்ணரைத்துப்பூசி நூற் கயிற்றினால் வரிந்துக்கட்டி அதன்மேல் 7 சீலைமண்செய்து, இவ்விரண்டு கடத்தின் நடுமைங்களில் மேற்புறம் பெரிதாகவும் கீழ்ப்புறம் சிறிதாகவும் 2 துவாரங்களிட்டு மேல் துவாரத்தால் புகை வெளிப்படாதிருக்கும் பொருட்டு ஒரு சிறு ஓட்டினால் அத்துவாரத்தை மறைத்து அதன்மேல் பசுவின் சாணத்தை அப்பி அக்கடத்தை ஒஞ்சரித்தபடியே ஒலிக்கா நின்ற அடுப்பின் மிசையேற்றிக் கீழ்முகத்துவாரத்தின் வழியில் ஒரு பாத்திரத்தை வைத்து அக்கினியை மூட்டி 3 சாமம் எரிக்கில் புகையுடன்கூடத் தைலம் பிறந்திறங்கும். இத்தைலத்தை தடவிதேய்த்தால் அர்த்தாங்கவாதம், குழந்தைகளின் இசிவு, வீக்கம், வெட்டுக்காயங்கள், பீஜவீக்கம், நரித்தலைவாதம், சந்நிபாதம், ஆண்குறித்துவளல், பெண்குறித்தளர்ச்சி, கீல், எலும்பு, மாமிசம், நரம்பு, இவைகளைப்பற்றிய வாயுவு நீங்கிப்போம்.

-வீரராகவ அய்யங்கார் வைத்தியர் முறை.

கேஸரன்ஜெனத் தைலம்:- சங்கம்வேர்பட்டை பலம் 20, இடித்து 16 படி ஆற்று ஜலத்தில் போட்டுக் காய்ச்சி 2 படியாக்கி, நல்லெண்ணெய் படி 2 சேர்த்து, அதில் செங்கழுநீர்கிழங்கு, அழிஞ்சிவிரைப்பருப்பு, மிளகு, கோஷ்டம் வகைக்கு பலம் 2, பசும் பாலாலரைத்து கரைத்துக்காய்ச்சி வடித்து சிரசுக்கு மாத்திரம் தடவிவர மயிர் உதிர்தல், தலைப்புழுவெட்டு, செம்படை மயிர் மாறும். மயிர் வளரும்.

-முத்துசாமி ஆசாரி வைத்தியர் முறை.

சுரஹரி கசாயம்:- சீந்திற்தண்டு, பேய்ப்புடல், புற்படாகம், முத்தக்காசு வகைக்கு பலம் 1, இடித்து 2 படி ஜலத்திலிட்டு காய்ச்சி 1/8 (அரைக்கால்) படியாக்கி கொடுக்க குளிர் சுரம் தீரும். இந்தபடி 6 வேளைக்கொடுத்தால் குளிர் சுரம் வரவே, மாட்டாது. பத்தியம் - கஞ்சிச் சாப்பிடவும்.

-தண்டபாணி செட்டியார் முறை.

அர்தாங்கேஸ்வர மாத்திரை:- பாதரசம், நாவி, கந்தகம், வெண்காரம் வகைக்கு விராகனிடை 5, சுத்தி செய்து நொச்சி இலைச்சாற்றால் 2 ஜாமம் அரைத்து மண் குகையில் வைத்து சீலை மண் செய்து உலர்த்தி ஒரு சட்டியில் உப்பை கொட்டி அதின் மத்தியில் மேற்படி குகையை வைத்து உப்பால் குகையை மூடி பிறகு மேல் சட்டி மூடி சீலை மண் செய்து 4 ஜாமம் எரித்து எடுத்து, செங்கழுநீர்ச்சாற்றாலும், நொச்சியிலைச் சாற்றாலும், பாகல்இலைச் சாற்றாலும் வகைக்கு 4 ஜாமம் அரைத்து குன்றி மணி அளவாக மாத்திரைகள் செய்து அனுபானத்தில் ஒரு மாத்திரை கொடுக்க சகல சுரங்களுந்தீரும்.

-அமுர்தலிங்கம் பிள்ளை வைத்தியர் முறை.

பாதரசத்தைலம்:- வெற்றிலை, பாவட்டை இலை, கோவையிலை வகைக்கு பலம் 5 நிறுத்து கல்லுரலிலிட்டு பாதரசம் விரா. 2½ விட்டு இருப்புப், பூணில்லாத உலக்கையால் மைபோலிடித்து கடைந்து திரட்டி ஒரு சட்டியிலிட்டு ஆமணக்கெண்ணெய் படி 1, சேர்த்து மர அகப்பையால் ஒன்றுபடக்கரைத்து 3 நாள் சூரியபுடம் வைத்தெடுத்து கலக்கி ¼ பலம் வீதம் போதுமான நாள் அளவும் சாப்பிட்டு வர நுணாக்காய்க்கிரந்திரணங்கள், கீற்றுக்கீற்றாக வெடிக்கின்ற புண்கள், பாதம்-உடம்பு கை இவைகளில் காணும் கருமேகம், கறுப்புச்சிவப்புள்ளியுடன் வட்டவடிவான மச்சங்கள், மேகரோகம், கண்ட மாலை, இவைகளை உள்ளிலும் வெளியிலும் நிலையாவாம்.

-வீரபத்திரப்பிள்ளை வைத்தியர் முறை.

மெருகுள்ளித்தைலம்:- மெருகன் கிழங்கைக் கொண்டுவந்து மேல் தோலை நீக்கி விட்டு மெல்லியதாக நறுக்கி 10 பலம் நிறுத்து அத்துடன் தோலுரித்த வெள்ளைப்பூண்டுத்திரி 10 பலம் சேர்த்து பாண்டத்தில் கொட்டி, 20 பலம் ஆமணக்கெண்ணெயை சேர்த்து அடுப்பேற்றிச் சிறிய தீயால் எரித்து அவை சிவந்து மிதக்கும் பக்குவத்தில் வடிக்கட்டி சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு 3 நாள் ஆறவைத்தப்பிறகு தினம் காலையில் மாத்திரம் ¼ பலம் முதல் 2 பலம் வரையில் தேக பேதங்களைத்தெரிந்து கொண்டு கொடுப்பாயாகில் சகல கீல்களையும் அசையவொட்டாமல் செய்கின்ற சந்திகசிலேஷ்மரோகமும், தளிர்போல் கிளைத்துண்டாகா நின்ற விரணமும், மேகமும், வாயுவின் வீக்க முங்குணமாகும். பத்தியம் புளிப்பும் உப்பும் நீக்கவும்.

-குப்புசாமி நாயுடு வைத்தியர் முறை.

அஷ்டவர்க்கச்சுடர் தைலம்:- மனோசிலை, ரசம், கெந்தகம், அரிதாரம், லிங்கம், எலிப் பாஷாணம், நாபி, சிங்கி, இவ்வெட்டும் வகைக்கு விரா 4 சேர்த்து காடியாலரைத்து நீலகண்ட சுடர்த்தைலமிறக்கிறதுபோல் வேப்பெண்ணெய் சேர் 5 யில் இறங்கி உடம்பிற் பூச இசிவு, பற்கிட்டல், சன்னி, தனுர்வாதம், வாதம் (80), புறவீச்சதீரும் சடாக்ஷரா செந்தூரம் உள்ளுக்குச் சாப்பிடவும்.

-பாப்பு பண்டிதர் வைத்தியர் முறை.

வாதஹரி எண்ணெய்:- வேப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெய், நல்லெண்ணெய், பசும் நெய் வகைக்கு படி 1, கழற்சி இலைச்சாறு, வாதமடக்கியிலைச்சாறு, பிரமியிலைச்சாறு வகைக்குபடி 1, இவைகளைச்சேர்த்து அதில் முடக்கொத்தான் கொழுந்து, பொடுதலைக் கொழுந்து, வெள்ளைப்பூண்டு வகைக்கு விராகனிடை 20, கருஞ்சீரகம், திப்பிலி, இந்துப்பு, வகைக்கு விராகனிடை 4, கழற்சி பருப்பு விராகனிடை 6, பெருங்காயம் விராகனிடை 2, இவைகளை அரைத்து கரைத்து காய்ச்சி வடித்து 5-10 விராகனிடை கொடுத்து வர குடல்வாதரோகம், அண்டவாதம் குணமாகும். இச்சாப்பத்தியம்.

-கௌரிசங்கர் நாயுடு வைத்தியர் முறை.

சடாக்ஷர செந்தூரம்:- ரசம், கந்தகம், காந்தம், அரப்பொடி, வெண்காரம், சிங்கி இவ்வாறும் வகைக்கு விரா 15, கற்றாழைச் சாற்றாலரைத்து உலர்த்தி பொடித்து கடும் வெயிலில் 1-நாள் வைத்து அதை மறுபடியும் மேற்படி சாற்றாலரைத்து முன்போல மூன்று தடவை வைக்க செந்தூரமாகும். சுக்கு, மிளகு, திப்பிலி இம்மூன்றும் சமமாக சேர்த்து சூரணித்த பொடி விரா 1, செந்தூரம் குன்றிமணி 4, தேன் கொஞ்சம் சேர்த்து தினம் 2 தடவை ஒரு மாதம் கொடுக்க சன்னி, மொழிச்சூலை, வலிப்பு (5), கிரந்தி, அரையாப்பு, நெஞ்சடைப்பு, கவுசி, முகவாதம், மூர்ச்சை, பித்தம், சிலேஷ்மம் தீரும்.

-பாப்புபண்டிதர் வைத்தியர் முறை.

நீலகண்ட சுடர்த்தைலம்:- வேம்பு, புங்கு, புன்னை, இலுப்பை, எள் இவைகளின் எண்ணெய்கள் வகைக்கு சேர் 1 சேர்த்து, சுத்திசெய்த லிங்கம், தாளகம், மனோசிலை, ரசம், கந்தகம் வகைக்கு விரா 5, காடியாலரைத்து வெள்ளைத்துணியில் தடவி திரியாக்கி நிழலில் உலர்த்தி கதிரிற் கோர்த்து மேற்படி எண்ணெயில் துவைத்து கொளுத்தவும்.

எரியும்போது மேற்படி எண்ணெய் கொஞ்சங்கொஞ்சமாய் விட்டு சுடர்தைலமிறக்கி 1-2 விரா, உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூச சன்னி (13), வலிப்பு, உட்குத்து, புறவீச்சுத்தீரும்.

-வீரபத்திரப்பிள்ளை வைத்தியர் முறை.

நவபாஷாணத்தைலம்:- வெள்ளைப் பாஷாணம், கெவுரிப் பாஷாணம், வீரம், தாளகம், மனோசிலை, லிங்கம், பூரம், ரசசெந்தூரம், ரசம் இவ்வொன்பதும் சுத்திசெய்து வகைக்கு விரா 5, சுத்திசெய்த கந்தகம் விரா 10 இவைகளை எலுமிச்சம் பழச்சாற்றாலரைத்து வெள்ளைத் துணியில் தடவி திரியாக்கி நிழலில் உலர்த்தி, வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், புங்கெண்ணெய், ஆமணக்கெண்ணெய், நல்லெண்ணெய் இவ்வைந்தும் வகைக்குப் படி 1 சேர்த்து நீலகண்ட சுடர்த்தைலம் இறக்கும் விதமாய் இறக்கி தேகமெங்கும் தூவாலையிட்டு 4 துளி முதல் 20 துளிவரையில் பெரியவர்களுக்கு இஞ்சிச் சாற்றில் கொடுக்க சந்துவாதம், முடக்குவாதம், பக்கவாதம், ஓடுவாதம் முதலிய வாதம் (80), சன்னி (13), தோஷம் முதலிய பயங்கரமான சகல ரோகங்களும் குணமாகும். உப்பில்லாப்பத்தியம்.

-மீனாட்சிப்பிள்ளை வைத்தியர் முறை.

மகா முசுறு முட்டை எண்ணெய்:- வேப்பம் பட்டைக் கசாயம், கும்மட்டிக்காய்ச் சாறு, சிற்றாமணக்கெண்ணெய், வகைக்கு படி 2, இவைகளைச் சேர்த்து அதில் முடக்கொத்தான் வேர், வெள்ளைச்சாரணைவேர், நீர்முள்ளி வேர், தவசுமுருங்கை வேர், கருடக்கிழங்கு, சிவனார் வேம்பு, வெந்தோன்றிக் கிழங்கு, ஏலம், சீரகம், பெருங்காயம், கருஞ்சீரகம், கடுகுரோகணி, வகைக்குப் பலம் 4, அரைத்துக் கரைத்து முசுறுமுட்டை, கோழிமுட்டைத் தைலம் வகைக்குப் பலம் 4 கூடச்சேர்த்து காய்ச்சி வடித்து 2 விரா வீதம் குழந்தைகளுக்கு பத்தியமாக கொடுக்க சகல சன்னியும் இசிவு முதலியவைகளும் தீரும். உப்பில்லாபத்தியம்.

-மா. அருணாசல முதலியார் வைத்தியர் முறை.

ஜன்னி நிவர்த்தனி:- கோழிமுட்டைத் தைலம் வெள்ளுள்ளித்தைலம் வகைக்கு பலம் 5, சேர்த்துவைத்து கொள்க. வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெய், நல்லெண்ணெய் இவை நாலும் வகைக்கு பலம் 1½ (ஒன்றரை) சேர்த்து

அதில் முடக்கொத்தான் வேர், சங்கம் வேர், எருக்கம் வேர், கொடிவேலி வேர் இவைகளின் பட்டைகளை வகைக்கு விராகனிடை 2 சேர்த்து அரைத்து கரைத்து காய்ச்சி வடித்து அத்துடன் மேற்படி கோழிமுட்டைத்தைலமும் வெள்ளுள்ளித்தைலமும் சேர்த்து சகல சன்னிகளுக்குமேல் பூச குணமாகும்.

பூவரசம்பட்டை மருந்து:- பூவரசம்பட்டை பலம் ¼ பொடுதலை சமுதம் பலம் ¼ சேர்த்து அரைத்து ½ (அரை) சேர் நீராகார ஜலத்தில் (காடியில்) கரைத்து காலையில் சாப்பிடவும். இந்தப்படி 3 நாள் காலையில் சாப்பிட்டு உப்பில்லா பத்தியமாயிருக்க கிரந்தி, அரையாப்பு, மேகம், சொறி, சிரங்கு, கரப்பான் தீரும்.

-வெங்கட்டாராம நாயுடு வைத்தியர் முறை.

பூவரசம் பட்டை எண்ணெய்:- பூவரசம்பட்டைச்சாறு, சிறுசெருப் பட்டைச்சாறு, வெங்காயச்சாறு வகைக்கு படி 1, சிற்றாமணக்கெண்ணெய் படி 3, சேர்த்து அதில் வீரம், பூரம், ரசம், கந்தகம், கஸ்தூரி மஞ்சள், கடுக்காய் வகைக்கு பலம் 2, துருசு, நவச்சாரம் வகைக்கு விரா 3, அரைத்து கரைத்து காய்ச்சி வடித்து 2-3 விரா வீதம் 10 நாள் சாப்பிட கிரந்தி, மேகம், சொறி, சிரங்கு, சூலை தீரும். பத்தியம் - புளி, புகை, வாயு பதார்த்தங்கள் தள்ளவும்.

-துரைசாமி ராஜா வைத்தியர் முறை

கௌரிசங்கரத்தைலம்:- பொடுதலைச்சாறு, கௌரிப்பழச்சாறு, பசும்பால், நல்லெண்ணெய், வகைக்கு படி 1, சேர்த்து அதில் மிளகு பலம் 1, பசும்பாலாலரைத்து கரைத்து காய்ச்சி வடித்து ஸ்நானஞ்செய்துவர மேககாங்கை, கபாலவலி, கபாலசூலை, குத்து, நேத்திரநீர்க்கடுப்பு, பீனிசம் தீரும்.

-நடராஜப்பிள்ளை வைத்தியர் முறை

பஞ்சரசமெழுகு:- சுத்தி செய்த 10 விராகனிடை, நெல்லிக்காய் கந்தகத்தை இரும்புவாணலிலிட்டு தீபம் போலெரித்து இரும்பு கரண்டியின் காம்பால் கிண்டவும். தைலம்போல் உருகிவரும் சமயத்தில் 1 பலம் கொம்புத் தேனை கொஞ்சங்கொஞ்சமாக விட்டு கிண்டி அதில் சுத்தி செய்த ரசம், வீரம், ரசகர்ப்பூரம், வகைக்கு விராகனிடை 6 சூரணித்தப் பொடியும், 1 பலம் தேனையும் கொஞ்சம் கொஞ்சமாய் விட்டு

ஓயாமற்கிண்டி சிவந்த மெழுகு பதத்தில் எடுத்து ஒரு குன்றிமணி அளவு வெல்லத்தில் பொதிந்து புழுங்கலரிசி தவிட்டிற் புறட்டி காலை மாலை 3 நாள் புளியும் உப்பும் தள்ளி பசும்பால் நெய் அன்னம் சேர்த்துச் சாப்பிட்டு பத்தியமாயிருந்து, 7-ம் நாள் ஸ்நானஞ் செய்து 9-நாள் பாலும் மிளகும் அரைத்து கொதிக்கவைத்து தேய்த்து ஸ்நானஞ்செய்யவும். 11-ம் நாள் ஆமணக்கெண்ணெயைத் தேய்த்து ஸ்நானஞ்செய்ய தனுர்வாதம், பட்சவாதம், இளம்பிள்ளை வாதம், சந்துவாதம், தம்பனவாதம், குடல்வாதம், முதலியவாதம் 80, சகலசூலை, சகலகிரந்தி, சகலகுஷ்டம், அண்டவாதம், அண்டச்சூலை, அந்தரவாயு, யோனிப்புற்று, லிங்கப்புற்று, மேகப்புண், சகலகுன்மம், குணமாகும். வாய்ப்பிடித்தால் சீனாகாரஜலத்தால் அல்லது கருவேலம்பட்டை கசாயத்தால் வாயைக் கொப்பளிக்கவும்.

-கோபாலபிள்ளை வைத்தியர் முறை.

தந்தரோகஹாரி:- கொம்பரக்கு, சீனாக்காரம், துருசு, மாசிக்காய், வகைக்கு விரா 10, அரப்பொடி, கடுக்காய் தான்றிக்காய் விரா 30 இவைகளை பொடித்து 5 எலுமிச்சம்பழச்சாற்றில் போட்டு சூரியப்புடம் வைத்து உலர்த்தி சூரணித்து தினம் தந்த சுத்தி செய்து வர சகலதந்த ரோகங்களும் குணமாகும்.

-வா. ஆறுமுகப்பிள்ளை வைத்தியர் முறை.

தேத்தான்கொட்டை லேகியம்:- தேத்தான்கொட்டை, முருங்கையின் பூ, மேற்படி விதை, மேற்படி பட்டை, மேற்படி பிசின், சுரைவிரை பருப்பு, கருவேலம் பிசின், துத்திவிதை, அதிமதுரம், திப்பிலி, சுக்கு வகைக்கு பலம் 1 சூரணித்து வடிகட்டிக்கொள்க. தேங்காய்ப்பால் படி ½ தண்ணீர் விட்டான் கிழங்குச்சாறு படி ½ பசும்பால் படி 1 இம்மூன்றையும் சேர்த்து அதில் சீனாகற்கண்டு பலம் 10 சேர்த்து காய்ச்சி பதத்தில் மேற்படி சூரணத்தைப்போட்டு தேன் பலம் 2, நெய் சேர் 1, விட்டு கிளறி லேகியமாக்கி தினம் பாக்களவு காலை மாலை சாப்பிட்டு வர எவ்வகை இந்திரிய ஸ்கலிதமும் தீர்ந்து விந்து கட்டி மணியாகும். பத்தியம் போகம் நீக்கவும்.

-சிவசங்கரம்பிள்ளை வைத்தியர் முறை.

பூவரசங்காய் எண்ணெய்:- ஆமணக்கெண்ணெய் படி 1, சிவப்பு நெருஞ்சிச்சாறு, வெங்காயச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு,

பூவரசங்காய்ச்சாறு, கர்ப்பூரவல்லிச்சாறு, கையாந்தகரைச்சாறு, சங்கங்குப்பிச்சாறு வகைக்கு படி ½ (அரைக்கால்) சேர்த்துக்காய்ச்சி வடித்து ஒன்று அல்லது இரண்டு பலம் வீதம் காலையில் மட்டும் மூன்று நாள் கொடுத்து ஏழு நாள் உப்பில்லாமல் பத்தியமாயிருக்க சூலை, அரையாப்பு, கிரந்தி தீரும்.

மகாபூவரசங்காய் எண்ணெய்:- பூவரசங்காய்ச்சாறு படி 8, அமுக்கிறாகிழங்கு, வாதமடக்கி, கோடங்கிழங்கு, கழற்சி இலை, சங்கங்குப்பி, வெருகங்கிழங்கு, கிளிமூக்குக்கிழங்கு, சுருதுரத்தி, கோழியாவரை இவைகளின் சாறு படி 1, அத்துடன் பூவரசம்பட்டை பலம் 2, பீநாரிப்பட்டை பலம் 8, அமுக்கிறாக்கிழங்கு பலம் 10, செங்கத்தாரி, சிவன்வேம்பு, மாவிலிங்கு, நீலி, ஆயிலியம், நெய்க் கொட்டான் இவைகளின் வேர்ப்பட்டை வகைக்கு பலம் 20, இடித்து 20 படி ஜலத்தில் போட்டுக்காய்ச்சி 2 படியாக்கி சேர்த்து அதில் ஆமணக்கெண்ணெய் படி 6 விட்டு அதில் வேப்பமுத்து, வாலுளுவையரிசி, திப்பிலி, செவியம், கார்போகரிசி, சதகுப்பை, சிறுதேக்கு, சண்பகப்பூ, கந்தகம், மனோசிலை, துருசு, துத்தம், சீனாக்காரம், நவச்சாரம், சத்திச்சாரம், எவச்சாரம், குக்கில் வகைக்கு விரா 2, அரைத்துப் போட்டு காய்ச்சி வடித்து தினம் 2 தடவை 2 அல்லது 3 விரா வீதம் 48 நாள் சாப்பிட்டுவர கருமேகம், வெண்மேகம் மேக ஊறல், மேகவெட்டை, சூலை, அரையாப்பு, படர்த்தாமரை, மேகவெடிப்பு, மேகதடிப்பு முதலிய சகல மேகரோகங்களும் குணமாகும். பத்தியம் புளி, புகையிலை, கரப்பான் பதார்த்தங்கள் தள்ளவும்.

-சா. வீராசாமிப்பிள்ளை வைத்தியர் முறை.

பவானி அம்மன் குங்குமக்களிம்பு:- அவரை இலைச்சாறு சேர் ¼ அதில் தேவையான அம்மனுக்கு அர்ச்சனையைச் செய்யும் குங்குமம் போட்டு, தேங்காய் எண்ணெய் பலம் ½ சேர்த்து கலக்கி சொறி, அக்கி, கரப்பான், சிரங்கு, காற்கடுவன், மண்டைக்கடுவன் இவைகளுக்குத் தடவி வர குணமாகும். 2-3 தினத்திற்கு ஒரு தடவை புதிதாக செய்து உபயோகித்து வரவும்.

-நா. சிவராமபிள்ளை வைத்தியர் முறை.

முசுறுமுட்டை எண்ணெய்:- பாவட்டை இலைச்சாறு, சங்கிலைச் சாறு, முசுறுமுட்டை வகைக்கு படி 1, வேப்பெண்ணெய் படி 4

இவைகளைச்சேர்த்து அதில் வெள்ளைபூண்டு, வசம்பு, சுக்கு, திப்பிலி, சீரகம், கருஞ் சீரகம், மிளகு, கஸ்தூரிமஞ்சள் வகைக்கு விராகனிடை 8 சூரணித்து கலந்துக்காய்ச்சி வடித்து 2 விராகனிடை வீதம் கொடுக்க சகல சன்னிகள், சுரங்கள், கபரோகங்கள் குணமாகும். உப்பில்லாப் பத்தியமிருக்கவும்.

-கா.ம. சுப்பிரமணியப்பிள்ளை வைத்தியர் முறை.

அனுபந்தம் முற்றிற்று.

☆☆☆

குறிப்புகள் :

வடசொல் மற்றும் பிறசொற்களை, தற்கால வழக்குப்படி மாற்றி எழுதிக் கொள்வதற்காக.

தாமரை
நூலகம்